ஸ்ரீ அழகிய சிங்கர் பட்டாபிஷேக மலர்.

ஸ்ரீ:

ஸ்ரீமதேராமாநுஜாய நம:

ஸ்ரீ பெரும்பூதூர் வந்த வள்ளல் மாலை.

திருவல்லிக்கேணித்
தமிழ்ச்சங்க வெளியீடு, 49.

சங்கக் காரியாலயம் :

ஆநந்தபிருந்தாவநம்,
ஸ்ரீ மௌனசுவாமிகள் மடத்துத் தெரு,
அம்பத்தூர்.

-1953.

ஸ்ரீ:

திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்கப் பிரசுரம்.

இலக்கம்.	வெளியீட்டின் பெயர்.	வள்ளலார் பெயர்.
1.	ஸ்ரீ ஆதிவண் சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் வைபவம். (49)	ஸ்ரீமான் வி. யன். சிங்காரவேலு முதலியார் அவர்கள்.
2.	தேசிகர் நூற்றந்தாதி. (42)	ஸ்ரீமான் ஆர். கேசவய்யங்கார் அவர்கள்.
3.	மறைமுடித் தேசிகனர்.	ஸ்ரீமான் சுந்தரசேகர நாயக்கர் அவர்கள்.
4.	மணவாள மாமுனிகள்.	ஸ்ரீமான் ஸி. நரஸிம்மாசாரியார் அவர்கள்.
6.	வேதாந்த தேசிக ஊசல்.	ஸ்ரீமான் ஆர். கேசவய்யங்கார் அவர்கள்.
9.	கம்பர் மாலை.	ராவ்ஸாஹெப். ஆர். ராமஸ்வாமி அய்யங்கார் அவர்கள்.
11.	ஸ்ரீ ஆண்டாள் மாலை.	ஸ்ரீமான் பி. எஸ். திருமலை அய்யங்கார் அவர்கள்.
12.	ஸ்ரீ பார்த்தசாரதி மாலை.	ராவ்பஹதூர் கே. ஆர். ராமாநுஜம் அவர்கள்.
13.	திருவருண் மாலை. (33)	ஸ்ரீமான் ஆர். கேசவய்யங்கார் அவர்கள்.
14.	தூப்புல் வள்ளல் பழமொழிச் சிறப்பு. (34)	ப. ரெ. திருமலை அய்யங்கார்.
17.	புகழ் மாலை.	தமிழன்பர்.
18.	கம்பர் தருங் கண்ணன்.	ஸ்ரீமான் பி. சேஷாத்திரி அய்யங்கார் அவர்கள்.
19.	முக்கோற்பகவர்.	ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸகோபாலய்யங்கார் அவர்கள்.
20.	ஸ்ரீ வீரராகவ மாலை.	ஸ்ரீமான் ரா. கிருஷ்ணய்யங்கார் அவர்கள்.
21.	திருமாமகள் மாலை.	திருப்புகழ்மணி பிரும்மஸ்ரீ டி. எம். கிருஷ்ணஸ்வாமி அய்யர் அவர்கள்.
22.	திருநரசிங்கர் மாலை.	ஸ்ரீமான் கமலாபுரம் ஆர். ராமஸ்வாமி அய்யங்கார் அவர்கள் திருத்தேவியார் ஸ்ரீரங்கநாயகி அம்மாள்.
23.	அழகியசிங்கர் மாலை.	ஸ்ரீமான் எம். பி. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் அவர்கள்.
24.	பொய்கையார் மாலை.	ஸ்ரீமான் மங்கலம் இராமாநுஜய்யங்கார் அவர்கள்.
25.	ஸ்ரீ ஆண்டாள் சந்திரகலா மாலை.	சிறந்த தேசிக பக்தர்.
26.	வாரணமாயிரமாலை.	ஸ்ரீமான் பி. எஸ். திருமலை அய்யங்கார் அவர்கள்.
27.	ஸ்ரீ பார்த்தசாரதி எம்மான் பாமாலை.	ஸ்ரீமான் பி. எஸ். கோவிந்தராஜய்யங்கார் அவர்கள்.
28.	தமிழரேத்தும் ஸ்ரீ மணவாளமாமுனிகள்.	சந்தமிகு செந்தமிழ்ச் செல்வர்.
29.	திருச்சின்னமாலை.	ஸ்ரீமான் கே. துரைசாமி அய்யங்கார் அவர்கள்.
30.	திருவேங்கடவர்மாலை.	நான்மறையாளர்கள்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:



ஸ்ரீ பெரும்பூதூர் வந்த வள்ளல் மாலை.

திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்க வெளியீடு—49.

இது

ஸர்வ மங்கள விஜய வாண்டு மேடத்திங்கள் ஏழாம் தேதி பாநுவாரம் சித்திரையில் ஆதிரை நாள் ஸ்ரீ அஹோபில மடம் 43-ஆம் பட்டத்தில் மூர்த்தாபிஷிக்த ராய் எழுந்தருளி யிருக்கிற ஸ்ரீமத் வேத மார்க்க ப்ரதிஷ்டாப நாசார்ய பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய ஸ்ரீ பகவத் ராமாநுஜ ஸித்தாந்த நிர்த்தாரண ஸார்வ பௌம ஸ்ரீவண் சடகோப ஸ்ரீ வீரராகவ சடகோப யதீந்த்ர மஹா தேசிகன் விஜய யாத்ரையில் சங்கக் காரியாலயமான அம் பத்தூர் ஆநந்த பிருந்தாவநத்தில் ஸ்ரீ பாஷ்யகாரர் திரு நக்ஷத்ர மஹோத்ஸவ தினமாகிய அன்று நடைபெற்ற கண்ணன் டோளோத்ஸவத்தில் ஸ்ரீ அழகிய சிங்கர் திருவடி வாரத்தில் இடப்பெற்ற காணிக்கை.

19–4–1953.

முதற் பதிப்பு—1953

Kabeer Printing Works, Madras (2207)

ஸ்ரீ:

உள்ளுறை.

பக்கம்.

முகவுரை. ... 1.

[பந்தல்குடி பாரத்வாஜ மாடபூசி ரெ. திருமலை அய்யங்கார், தமிழ் வித்துவான், காரியதரிசி, திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கம்.]

இராமாநுச நூற்றந்தாதி. ... 11.

[திருவரங்கத்தமுதனார்.]

ஸ்ரீ எதிராஜ சதகம். ... 26.

[விலக்ஷணகவி இராமாநுஜ நாவலர்.]

இராமாநுஜ மாலை. ... 41.

[இராஜகோபால முதலியார்.]

ஸ்ரீ ஆதிவண் சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் வைபவம். (இரண்டாம் பதிப்பு.) ... 56.



ஶ்ரீ:

முகவுரை

திருமால்கமலை சேனையர்கோன் றிருநாவீற றுதமுனி [பெருங்
சீருய்யக்கொண் டார்மணக்காற் சிறந்தார்யமுனைத் துறைவர்
குருவாநம்பி யெதிப்பெருமான் கோவிந்தாசா ரியர்பட்டர்
குலவேதாந்தி நம்பிள்ளை கோலக்கண்ண பாதர்நெறி
யொருவா வரங்கேசாரியர்பே ரோங்குங் கேசவாரியர்நன்
குருமாவாசர் கேசவரென் றுலககுருக்களா யுய்ய
வருமாரியர்க டாள்வணங்கி வைணவம்பார் மல்கியெழ [வாம்.
வந்தைந்துறுப்பு நல்குமெதி வரர்வண்சடகோ பரைப்பணி

—(வேலாமூர் கிருஷ்ணமாசாரியர். அரியக்குடி
அலர்மேன்மங்கை பிள்ளைத்தமிழ். பாயிரம். 5.)

உடையவராக மலரடிக்காட்படுவோர்க்கரும்பொன்
உடையவராக ரந்தந்தளிப்பானுறும் வாதியர்வாழ்வு
உடையவராக ந்துறந்துமுக்கோல்கைக்கொண்டோங்கிநற்பேர்
உடையவராக விங்கெய்தெதிராசனையுன்னுநெஞ்சே.

—(வேலாமூர் கிருஷ்ணமாசாரியர். திருவெவ்வு
ளூர்த் திரிபந்தாதி. காப்பு. 2.)

அம்பெருமா னூர்வயிற்றி னுங்கருவி னுடாம
லெம்பெரு மானு ரிணையடியை—நம்பாத்
துதித்திருப்பாய் நின்றன் றெழிலா லிடர்கள்
விதித்திருப்பாய் நின்றநெஞ்ச மே.

—(வேலாமூர்கிருஷ்ணமாசாரியர். திருவரியைச்
சிலேடை வெண்பாமாலை. காப்பு. 2.)

யதிக்கோன் கருணைக் கிலக்காகி முத்தி
பதிக்கோ வலனடியைப் பற்ற—விதிக்கு
மறையந்த வாசிரியர் வண்பதஞ்சேர்ந் துய்வோந்
தறையந்த வாசிரியத் தான்.

—(வேலாமூர் கிருஷ்ணமாசாரியர். திருவரியைச்
சிலேடை வெண்பாமாலை. காப்பு. 3.)

பரசமய மெனும்வெய்ய கண்டக
தருக்குலம் பாழ்பட நிலத்திலங்கைப்
பற்றுசுடர் வடிவாய பரசுவென
வும்பரமபா வனமுடைக் கமலமா
னரசனுயர் மதநிலை பெறச்செய்
தெடுத்ததொரு வம்பொன் வெற்றித்துவசமே
யாமெனவு மொளிர் துய்ய திரிவேணு
தண்டமு மகன்மார்பி னுருவொடுற்றூ
விரவுமெழின் மறைநாலெ னத்திகழ
கிற்குடிப வீதமுஞ் சிகையுநேராய்
விரிபுண்டரக் குறியும் வேறுதய
வாதித்த விசயமென வார்த்த செம்மைப்
புரியாடையும் பொருவி லெதிராச
ரிருசரண புண்டரிகமும் பணிகுவாம்
புகரிலா வரியைக்க ணலர்மீது
மங்கையடி புனைதமிழ் நிதந்தழையவே.

—(வேலாமூர் கிருஷ்ணமாசாரியர். அரியக்குடி அலர்மேன்மங்கை பிள்ளைத்தமிழ். பாயிரம். 3.)

ஈடரிய வியாசமுனி தேர்ந்து ரைக்கு
மிலகுவே தாந்தசூத் திரங்க ளுக்குத்
தேடரிய பாடியந்தான் றமிழ்வே தத்தின்
செழும்பொருள்க ணேர்மையுட னுய்ந்த ளித்தோன்
பீடமையுங் கண்ணபிரா னருளிச் செய்த
பிறங்குதிருக் கீதைக்குப் பாடி யத்தை
வீடளிக்கு மத்தமிழ்வே தத்தி னாலே
மிலைச்சியரு ளுடையவர்தா டொழுது வாழ்வாம்.

—(ஸ்ரீ. பண்டிதசிந்தாமணி கோபாலாசாரியார். திருத்தொண்டர்காதை. திருத்தெய்வவணக்கம் 3.)

உலகம் என்பது உயர்ந்தோர்மேற்றே. அது அவாவுவதும் பேரறிவாளன் திருவினையே. முறையாய் நூல் உணர்ந்தோரே கருவிலே திருவுடையவர். ஞானம், அநுட்டானம், வைராக்கியம் முதலியவற்றை நிதியாகப்பெற்ற பெரியோர் திகழும் நாடே செந்தமிழ் நாடு.

“ வடவேங்கடந் தென்குமரி
ஆயிடைத்
தமிழ்கூறு நல்லுலகத்து ”

என்றுராகலின் தமிழகம் சான்றேருடைத்து என்பது பெறலாம். இனிமையும் நீர்மையும் தமிழெனலாகும். (இனிமை அன்பு. நீர்மை ஒருமை.) தண்ணளியும் மெய்ம்மையும் உடையவன் தமிழன். தொன்னெறியாம் நன்னெறியைப் பின்பற்றி தாமின் புறுவது உலகு இன்புறக்கண்டு களிக்கும் பெற்றியை உடையவர் நற்றமிழர்.

உலகம் போற்றும் பெற்றியராய்த் திகழும் கம்பநாட்டாழ்வான், அகத்தியரைப்பற்றிக்கூறுமிடத்து,

“ என்றுமுள தென்தமிழ் இயம்பி யிசைகொண்டான் ”

என்றும்,

“ தமிழெனு மளப்பருஞ் சலதிதந்தவன் ”

என்றும் பெருமிதத்துடன் கொண்டாடுகிறுர். “ வண்தமிழ்மா முனி ” என்பது பொய்யில் புகழ்க் கோழியர்கோன்குடைக் குல சேகரன் தூமொழி. தமிழின் பெருமை ஆராயுஞ்சீர்மைத்து.

“ நம்பியைக் காண நங்கைக் காயிரம் நயனம் வேண்டும்
கொம்பினைக் காணுந் தோறுங் குரிசிற்கு மன்னதே யாம்
தம்பியைக் காண்மி னென்பார் தவமுடைத் துலக மென்பார்
இம்பரிந் நகரிற் றந்த முனிவனை யிறைஞ்சு மென்பார்.”

—(இராமாவதாரம். பாலகாண்டம். கார்முகப் படலம். 43.)

என்ற பாடலில் முன்னிரண்டடிகளில் திப்பியதம்பதிகளையும், மூன்ருவது அடியில் முத்திதருமெதிராசரையும், நான்காவது பாதத்தில் அன்பர்குலத்தோன்றலான தூப்புற் காவலனையும் குறிக்கொண்டுள்ளார் கல்வியிற் பெரியரும் கவிச்சிரேட்டருமான கம்பர் என்பது தெளியக்கற்ருர் தேற்றம்.

இங்ஙனம் குறிக்கப்பெற்றுள்ள இராமாநுசன் எனும் எதிகட்கிறைவனை நற்றமிழர் போற்றியுகந்து புந்தியிற் கொண்டவாற்றை முதற்கண் காண்பாம்.

திருவரங்கத்தமுதனுர் என்பவர் பங்குனியத்த நன்னுளில் எழில் மூங்கிற்குடி விளங்கத் திருவவதரித்து, திருவரங்கம்

பெரியகோயிலில் இருந்தது காரணமாகப் 'பெரியகோயில் நம்பி' என்று கீர்த்தியுடன் வாழ்ந்து வந்தார். அஷ்டப் பிரபந்தம் பாடியுள்ள "பிள்ளைப்பெருமாளையங்கார்" என்பவர்க்கு இவர் திருத் தகப்பனார் என்று சிலரும், பாட்டனார் என்று சிலரும் கூறுகின்றனர். "நந்தாமல் எதிராசர் நலம்புகழ்வோன்" என்றும், "அந்தாதிநூற்றெட்டும் அருளினான்" என்றும் சொல்லுகிற படியே இவ்வமுதனார் "இராமாநுச நூற்றந்தாதி" என்ற பெயரிய ஒரு பிரபந்தம் அருளிச் செய்துள்ளார். இச்சீரிய பிரபந்தம் நூற்றெட்டுக் கட்டளைக் கலித்துறையில் அந்தாதித் தொடையில் யாக்கப்பெற்றுள்ளது. எம்பெருமானார் திருவடிகளிலே மெய்யன்பர்க்கு நித்யாநுஸந்தேயமாம்படி பாட்டுக்கள் தோறும் "இராமாநுசன்" என்னுந்திருநாமத்துடன் பொலிந்து நிற்கும் இப்பிரபந்தத்திற்கு "பிரபந்நகாயத்ரி" என்ற திருநாமம் அன்று தொட்டே நிகழலாயிற்று. இந்நன்னூல் அவதாரத்தைப்பற்றிக் கீழ்க்கண்ட ஐதிஹ்யம் கேட்கப்பெறுகிறது. அதாவது :—எம்பெருமானார் திருவடிகளிலே அதிக அன்பு பூண்டவராய், நம்மாழ்வார், திருக்குருகைப்பிரான் பிள்ளான் முதலியவர்களுடைய திருவருளுக்கு இலக்காகிய திருவரங்கத்தமுதனார், ஸ்ரீ பாஷ்யகாரருடைய திருக்கல்யாண குணங்களில் மிகவும் ஈடுபட்டு அவ்வுடையவர் விஷயமாக ஒரு பிரபந்தம் செய்தருளி அதை அங்கீகரிக்குமாறு பல தடவைகளிலும் அவ்வெதிராசர் திருமுன்பு விண்ணப்பம் செய்ய, அதை அச்சான்றோர் ஏற்காமையாலே திருக்குருகைப்பிரான் பிள்ளான், ஏகாந்தத்தில் அம்முக்கோற்பகவர் ஸந்நிதியில், "ஸ்ரீமந்நாதமுனிகளுக்கு 'கண்ணிநுண் சிறுத்தாம்பின்' அநுஸந்தானத்தினால் யோக தசையில் ஸேவை தந்தருளிய நம்மாழ்வார் "நூற்றந்தாதி" யுடன் சேர்ந்த நாலாயிரம் பாசுரங்களையும் உபதேசித்த காலை, 'இதற்கு விஷயம் யார்?' என்று வினவியருள, ஆழ்வாரும் தம்முடைய திருவடியின் கீழ் திரிதண்டதாரியாய் காஷாயவேஷத்துடன் கூடிய ஒரு திவ்யவிக்ரஹத்தைக் காண்பித்தருளினார்" என்கிற ஐதிஹ்யம் பொய்யாகலாமோ? இதனால் தேவரீர் விஷயமான பிரபந்தம் நம்மாறன் திருவுள்ளத்தில் குடிகொண்டிருந்த தொன்றன்றோ? அதனைப்பிரவசநம் செய்தல் தகுதியல்லவோ?" என்று விண்ணப்பிக்க, இளையாழ்வாரும் 'அதுமுற்றும் மெய்யே' என்று கூறி, திருவரங்கத்தமுதனாரை அழைத்து, அவரைக்

குளிரக்கடாக்ஷித்தருளி, "நம் சடகோபனுடைய அருளுக்குப் பாத்திர பூதரான உமக்கு, நம்மாழ்வாருக்கும் நாதமுனிகளுக்கும் நடந்த ஸம்வாதம் க்ருஷ்ணர்ஜ்ஜுன ஸம்வாதம் ஸஞ்ஜயனுக்கு ப்ரகாசித்தாற்போலே ப்ரகாசிக்கக்கடவது" என்று அநுக்ரஹித் தருளினர். அந்த அநுக்ரஹ விசேடத்தினுல் அமுதனாரும் அந்தாதியை முற்றுவித்து, பெரும்பூதூர் முநிவர் ஸந்நிதியில் விண்ணப்பம் செய்ய, அவ்வள்ளலும் அதைக் கடாக்ஷிக்கப் போரவுகந்து, அதனை இயற்பா இறுதியிற் சேர்த்து அநுஸந்தித்து வருமாறு நியமித்து அருளினர்.

மேலும், ஸ்ரீமந்நாதமுனிகளால் திருப்பிரதிட்டை செய்விக்கப் பெற்ற நம்மாழ்வாருடைய திவ்ய விக்ரஹத்தின் திருவடியில் திரி தண்டம், காஷாயம் முதலியவற்றுடன் கூடிய ஒரு விக்ரஹமும் ஏறியருளப் பண்ணப்பெற்றிருப்பதும் இன்றும் ஸ்ரீரங்கத்தில் ஸேவிக்கப் பெறுவதால் முற்கூறப்பெற்ற ஐதிஹ்யம் வற்புறுத்தப் படுகின்றது.

அகலகில்லேனிறையும் என்று அலர்மேல் மங்கையுறைமார் பனின் துயரறு சுடரடி தொழுது எழும் இவ்வுலகினின் மிக்க அருளையுடைய திருநாவீறுடையபிரானது திருவடிகளின்கீழ் வாழ் வல்லது மற்றென்றும் வேண்டாதவர் யதிஸார்வபௌமன். கடன் ஞாலத்துள்ளோர் அத்தியயநம் பண்ணக்கடவ அகிலவேதங்களுக் கும் நற்கலைகட்கும் ப்ரதானப்ரதிபாத்யனுய், புறமே தொழுவார்க் குப் பொய்யனுய், தனதாளடைந்தார்க்கணியனுய், ஸர்வேசு வரனை வசீகரிக்கவல்லதொரு துய்ய சரணுகதி மார்க்கத்தை ஸர்வோப ஜீவ்யமாக்கி யருளின லக்ஷ்மீஸம்பந்தர் இராமாநுச முனி. கமலாஸனன் நடத்திய அயமேத வேதியின்மேல் உத்தர வேதி மத்யத்திலே ஆவிர்ப்பவித்த பெருந்தேவியுடன் விளங்கும் பேரருளாளனை யல்லது மற்றென்றறியாத உண்மையன் எதிராசன்.

திருப்புகழ்ச்சுவாமிகள் என்றும், முருகதாசசுவாமிகள் என்றும் வழங்கும் மஹான் வண்ணச்சரபம் ஸ்ரீலஸ்ரீ தண்ட பாணிசுவாமிகள் தாம் இயற்றிய புலவர்புராணம் எனும் சிறந்த நூலில் நம் இராமாநுசனைப் போற்றியுள்ள பெற்றி பகர்வாம்.

"இரட்டைக் குரவர் சருக்கம்" எட்டாவது பாட்டு பின் வருமாறு :—

“ நாரணன் பரமென் றோர்ந்து நாடொறும் வணங்கிப் போற்றி
யாரணம் பகர்ந்த முத்தி யடைந்தவர் பலரா னலும்
பாரணங் கறியப் பொல்லாப் பறிதலை யினரோ டுள்ளார்
போரணங் கொழிய வென்ற புகழ்க்குரு வொருவன் றனே. ”

இதன் கீழ் உள்ள குறிப்பு வருமாறு :—

“ குருமார்கள், ஆராயுமிடத்து, பொதுக் குரு வென்றும், பொதுச் சிறப்புக் குருவென்றும், சிறப்புக் குரு வென்றும் மூவகைப் படுவர். அநாதியில் வேதத்தினிடத்து, சண்மதங்களை யிலக்கண வகையாலமைத்த பிரமா பொதுக் குருவும், இடைக்காலத்திற் றேன்றி யொவ்வொரு மதங்களைச் சிறக்கச் செய்தோர் பொதுச் சிறப்புக் குரவரும், அவ்வவர்க்கு முன்னிலையில் அமைந்து அவ்வச் சமயபக்தியை வளர்க்க வுபதேச போதனை புரிவோர் சிறப்புக் குர வருமாவர். அம்முறையில், இடைப்பட்ட பொதுச் சிறப்புக் குரவர் வைணவத்திலும் பலர் உளரேனும் அவர் எல்லாம் நிச்சய புத்தி யுடன் பக்தி புரிந்து பணிந்து துதித்து முத்தியடைந்தவராய் அமைந்தனர். சமணராகிய கீழ்ச் சமையரது பிணக்கங்களைத் தமது தவப் பெருமையாற் செயங்கொண்டு விளங்கியவர் இராமாநுஜர் என்னும் உடையவருமே யாவர், என விளக்கிய தாயிற்று. ”

“ தற்கச் சமணரும் சாக்கியப் பேய்களும் தாழ்சடையோன்
சொற்கற்ற சோம்பரும் சூனியவாதரும் நான்மறையும்
நிற்கக் குறும்புசெய் நீசரும் மாண்டனர் நீள்நிலத்தே
பொற்கற்பகம் எம்இராமா நுசமுனி போந்த பின்னே. ”

—(இராமாநுசநூற்றந்தாதி. 99)

என்ற அமுதனர் பாசுரம் இவண் அநுஸந்தேயம்.

புலவர் புராணம் உடையார் வாலறிவனை வியாசன் இயற்றிய சூத்திரப் பொருள் திருமகளோடு வருந்திருமால் தான் என்று நன்கு தாபித்தவர் இராமாநுசமுனி என்றும், உபய வேதாந்தத்தையும் நன்கு பயின்று உபயவிபூதியையும் பெற்றுத் திகழ்ந்தவர் உடையவர் என்றும், அவருடைய சீடர்கள் வடகலை, தென்கலை என்ற இருபகுப்பினராகிப் பெருமையுடன் வாழ் கின்றனர் என்றும்,

“ அக்குருப் பெருமை கோடி யறைபவ ரறைவா ரன்றேன்
றிக்குமுற் றுணர்வியாசன் செய்த சூத்திரங்க ளெல்லா

மைக்குழம் பனையமேனி மாயன்மாட் சிமையே யென்னப்
பக்குவ முள்ளோர் தேறப் பரிந்துதா பித்தா னம்மா. (9)
வடமொழிப் புலமைவாய்ந்தும் வயிறுநொந் தீன்ற வன்னை
குடமுலைப் பாலுமுண்ணுக் குருபரன் முதலோர் கூறுந்
திடமுறு தென்சொற்பாடற் சிறிதுமெள் ளாதசிந்தை
புடனவிர்ந் தவனேமுற்று முடையவ னெனும்பே ருற்றுன். (10)
ஆதலா லவன்றன்சீட ராகியக் கரமோ ரெட்டான்
மாதவன் றன்னைநாடும் வயிணவப் பெருங்கு ழாத்தோர்
வேதநூல் கற்கின்றுரும் வியன்றமிழ்த் துதிகற் பாரும்
பேதமொன் றின்றியொன்ருக் கூடுபு பிறங்கி ருரே.” (11)

என்ற பாக்களிற் கூறுகின்றுர்.

ஈண்டுக் குறித்த ஸ்ரீதண்டபாணிசுவாமிகள் அன்புக்குரிய ஸ்ரீமத். இராமாநந்த சுவாமிகளது மாணுக்கர் கோயமுத்தூருக் கடுத்த சிரவணபுரம் கௌமாரமடாலயம் **ஸ்ரீமத் கந்தசாமி சுவாமிகளால்** இயற்றப் பெற்ற **பக்தமான்மியம்** எனும் பெரு நூலில் **இராமாநுசகதி** யிலுள்ள சில பாக்கள் தருதும்.

சீமார்க்க தேசிகனுஞ் சீடனும்வெம் பவமொழித்து
மாமாயன் றிருவடியின் மன்னுமுயர் கதிவகுத்தேன்
றீமாயை வயத்தர்களுந் தேரவுப தேசநவில்
ராமாநு சன்கதியி னன்குணர்ந்த துரைப்பேனே. (1)

அராமீதி லறிதுயில்கொ ளச்சுதன் பொன் னடித்துணைகள்
பராவடியார் சென்னிமிசை பதித்தருள் பொற்பதம் வாய்ந்தோன்
பிராமணவான் குலத்தினர்செய் பெருந்தவமா முருச்ச மைந்தோ
னிராமாநு சத்திருப்பே ரேய்ந்தவா சாரி யனே. (2)

நுண்மைபெறு மதியுடையார் நுவலுமிரா மாநுசப்பே
ரொண்மையன்றன் மதிக்கோல்கொண் டுளவேத சாத்திரஞ்சொல்
வண்மைபெறு பொருளெல்லா மதித்தறிந்து பூரணமார்
தண்மைபெறு மதியனைய தன்மைகொடு நிலவினுன். (4)

புறச்சமயத் துள்ளாரும் போதநா ரணன்பொற் ருளிற்
றிறப்படு பத்தியெய்தச் செய்யபா டியஞ்சொல்சீரோ
னறத்தகை வழுவாச்சீட ராயமோ டவனி யெய்தாச்
சிறப்புறு மாயன்பொற்ருட் சின்மயத் தணைந்தான் மாதோ. (56)

புதுவைக்கு அணித்தாக உள்ள ஏப்பாக்கம் என்னும் நல்லூரில் 'ஸ்ரீமான். ஏ. வெ. விலக்ஷணகவி இராமாநுஜ நாவலர்' என அனைவரும் கொண்டாடுமாறு தோன்றி, வடமொழி, தென்மொழி நூல்கள் பலவற்றையும் தக்க பெரியோர்களிடத்தில் ஐயந்திரிபறக் கற்று, ஜ்ஞாநபக்தி வைராக்யங்களையுடையராய் வாழ்ந்து, திருமுட்டம், சித்ரகூடம், சுதரிசனகிரி முதலிய திவ்யதேச புராணங்களையும், பாத்ம புராணத்தில் உத்தர பாகத்தையும், மற்றும் எம்பெருமான்கள் விஷயமான சில பதிகங்கள் சதகங்கள் கீர்த்தனைகள் முதலியவற்றைத் தமிழ்ச் செய்யுள் நடையில் இயற்றியும், அத்துடன் சிலவற்றை வசன நடையான நூல்களாகச் செய்தும் உபகரித்து வந்தார் ஒருவர். தன்னையடைந்த அநேகருக்கு ஜ்ஞாநபக்தி வைராக்யங்களை உபதேசித்து, அம்முகத்தாலே அவர்கள் நற்கதி அடையும்படி திருத்தியும், தம் வாழ்நாள் முழுவதும் பகவத்பாகவத ஆசாரிய கைங்கர்யங்களிலேயே பொழுதுபோக்காக காலங்கழித்து வந்தார் இப்பெரியார். இவர் இயற்றிய நூல்கள் (1) ஸ்ரீபாத்மோத்தரம், (2) புருஷார்த்ததீபிகை யென்னும் பாலவினுவிடை, (3) ஸ்ரீ வைஷ்ணவ தத்துவம், (4) வைராக்கிய சூரியோதயம், (5) தேசிகன்திருப்பதிகம், (6) ஸ்ரீமணவாளமாமுநிகள் திருப்பதிகம், (7) ஸ்ரீஎதிராஜசதகம், (8) ஆழ்வார் பஞ்சரத்திநம், (9) பெருந்தேவித் தாயார் திருப்பதிகம், (10) ஸ்ரீ வரதராஜப் பெருமாள் திருமாலை, (11) ஸ்ரீவரதராஜப் பெருமாள் பதிற்றுப் பத்தந்தாதி, (12) ஸ்ரீபகவந்நாம சங்கீர்த்தனம், (13) போற்றித்திருப்பதிகம், (14) ஸ்ரீமத்தொண்டரடிப்பொடியாழ்வார் ப்ரபாவம், (15) ஸ்ரீமத் பேரன்கூரத்தாழ்வான் ப்ரபாவம், (16) ஸ்ரீவைணவ மங்கையர் வாழ்க்கைப்பாடு, (17) ஆண்டாள் விஷயம், (18) ஸ்ரீசூரண மாஹாத்மியம். (19) அரிதூஷணகபோலசபேடிகை, (20) ஸ்ரீஜெய தேவ ப்ரபாவம், (21) சாந்தபூஷணசம்புடம், (22) ஸ்ரீவைஷ்ணவ கம்பீரஜோதி, (23) சத்சம்ப்ரதாயதரள மாலிகை, (24) விலை மாதர் விளக்கம், (25) ஸ்ரீமுஷ்ண புராணம், (26) திருச்சித்திரகூட புராணம், (27) ஸ்ரீசுதரிசனகிரி புராணம்.

'இராமாநுசனுஞ்சாந்த குணநாவன்', 'பண்பன் இராமாநுசனும்நாவலன்' என்று போற்றப்பெற்று வந்த விலக்ஷண கவி இராமாநுஜநாவலர் அவர்கள் இயற்றிய "ஸ்ரீஎதிராஜ சதகம்" ஆதியில் இரண்டு காப்புச் செய்யுட்கள், இறுதியில்

இரண்டு வாழிப்பாக்கள் கொண்டதாய் "பூமாநிறம்" என்று தொடங்கும் நூறு பாக்களுடன் திகழ்கின்றது. ஒவ்வொரு பாட்டும் "எதிராசனே எதிராசனே" என்ற மகுடமமையப் பூரணம் செய்யப் பெற்றுள்ளது.

"சென்னைமாநகரம் சிவில் இஞ்சிநீரிங் காலீஜ் தமிழ்த் தலைமைப் புலமை ஸ்ரீமாந். பு. செ. இராஜகோபால முதலியார் அவர்கள்" அமுதனார் அந்தாதியைத் தழுவி, வெண்பாவில் "இராமாநுஜமாலை" என்று ஒரு நூல் இயற்றி யுள்ளார்கள். இது "திருப்பாதிரிப்புலியூர் ஜெகநாத முதலியா ரவர்களால் த்ரிபாஷாந்த்ரவச்சுக்கூடத்தில் அக்ஷய ௵ ஐப்பசி ௴ பதிப்பிக்கப்பட்டது" என அறியப்பெறுகின்றது. இதன் பிரதியை எமக்கு நல்கியவர் வித்வான் ஸ்ரீ உப. வே. சுதர்சநாசாரி யார் ஸ்வாமி. அவருக்கு எமது நன்றி.

திருவரங்கத்தமுதனார் அருளிச் செய்த "இராமாநுச நூற்றந்தாதி", விலக்ஷணகவி இராமாநுசநாவலர் இயற்றிய "ஸ்ரீஎதிராஜசதகம்", இராஜகோபால முதலியார் செய்த "இராமாநுஜமாலை" என்ற மூன்று நன்னூல்களும் "ஸ்ரீ பெரும்பூதூர் வந்த வள்ளல் மாலை" என்ற திருநாமத்தோடு இத்திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கத்தின் நாற்பத்தொன்பதா வது வெளியீடாகப் பிரசுரிக்கலாயிற்று.

இச்சங்கப் பிரசுரங்களில் 10-10-37-ல் வெளிவந்த "ஸ்ரீ ஆதிவண்சடகோபயதீந்த்ர மஹாதேசிகன்" (1) என்ற வெளியீட்டுப் பிரதிகள் இல்லாததால் அதன் இரண்டாம் பதிப்பு இம்மாலையில் சேர்த்துளேம்.

ஸ்ரீஅஹோபிலமடம் 43-ஆம் பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருக்கிற ஸ்ரீமத்வேதமார்க்கப்ரதிஷ்டாப நாசார்ய பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரோபய வேதாந்தாசார்ய ஸ்ரீபகவத்ராமாநுஜ ஸித்தாந்த நிர்த்தாரண ஸார்வபௌம ஸ்ரீவண்சடகோப ஸ்ரீவீரராகவசடகோப யதீந்த்ர மஹாதேசிகன் விஜய யாத்ரையில் திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கக் காரியாலயமான அம்பத்தூர் மௌன சுவாமிகள் மடத்துத் தெரு ஆநந்த பிருந்தாவநத்தில் (ஸ்ரீரங்க விலாசத்தில்) ஸர்வ மங்கள விஜயவாண்டு சித்திரையில் செய்ய திருவாதிரையாய் ஸ்ரீபாஷ்யகாரர் திருநக்ஷத்ர மஹோத்ஸவ தினமாகிய ஏழாம் நன்னாள் நடைபெற்ற கண்ணன் டோளோத்ஸவத்தில் ஸ்ரீஅழகிய

சிங்கர் திருவடிவாரத்தில் காணிக்கையாக இடப்பெற்ற தனிப் பெருஞ் சிறப்புடையதாய் விளங்குகின்றது இம்மாலை.

இன்ப மாரியேயாம் இம்மாதேசிகர்க்குத் தொண்டு பூண்டு பல்லாண்டே பல்லாண்டும் பாடுவோமாக.

இம்மாலை வெளிவர உதவிபுரிந்த அடியார்க்கு நல்லார்கட்கு எமது நன்றி என்றும் உரித்தாகுக.

எண் பெருக்கு அந்நலத்து
ஒண் பொருள் ஈறில
வண் புகழ் நாரணன்
திண் கழல் சேரே.

—(திருவாய்மொழி 1-2-10)

ஸ்ரீரங்க விலாசம்,
அம்பத்தூர்
19-4-1953.

ப. ரெ. திருமலை அய்யங்கார்,
காரியதரிசி.

ஸ்ரீ:

திருவரங்கத்தமுதனார்

அருளிச்செய்த

இராமாநுச நூற்றந்தாதி

தனியன்கள்.

[வேதப் பிரான்பட்டர் அருளிச் செய்தவை.]

முன்னை வினையகல மூங்கிற்குடியமுதன்*
பொன்னங்கழற்கமலப்போதிரண்டும்*—என்னுடைய
சென்னிக்கணியாகச்சேர்த்தினேன்* தென்புலத்தார்க்கு
என்னுக்கடவுடையேன்யான் ?

நயந்தருபேரின்பமெல்லாம் பழுதின்றிநண்ணினர்பால்*
சயந்தருகீர்த்தி யிராமாநுசமுனிதாளிணைமேல்*
உயர்ந்தகுணத்துத் திருவரங்கத்தமுது* ஓங்குமன்பால்
இயம்பும்கலித்துறையந்தாதியோத இசைநெஞ்சமே!

சொல்லின்தொகைகொண்டு உனதடிப்போதுக்குத் தொண்டு [செய்யும்*
நல்லன்பரேத்தும் உன்நாமம் எல்லாம் என்தன்நாவினுள்ளே*
அல்லும்பகலும் அமரும்படிநல்கு அறுசமயம்
வெல்லும்பரம!* இராமாநுச! இதுஎன்விண்ணப்பமே.

தேசமெல்லா முகந்திடவே பெரும்பூதூரில்
சித்திரையில் ஆதிரைநாள்வந்து தோன்றிக்
காசினிமேல் வாதியரைவென்று அரங்கர்
கதியாக வாழ்ந்தருளும் எதிராசா! முன்
பூசுரர்கோன் திருவரங்கத்தமுதனார் உன்
பொன்னடிமேல் அந்தாதி யாகப்போற்றிப்
பேசிய நற்கலித்துறை நூற்றெட்டுப்பாட்டும்
பிழையறவே எனக்கருள்செய் பேணிநீயே.

§§பூமன்னுமாது பொருந்தியமார்பன்* புகழ்மலிந்த
பாமன்னுமாறன் அடிபணிந்துய்ந்தவன்* பல்கலையோர்
தாம்மன்னவந்த இராமாநுசன் சரணாரவிந்தம்
நாம்மன்னிவாழ* நெஞ்சே! சொல்லுவோம்அவன்நாமங்களே. (1)

§§கள்ளார்பொழில்தென்னரங்கன்* கமலப்பதங்கள்நெஞ்சிற்
கொள்ளாமனிசரைநீங்கிக்* குறையல் பிரானடிக்கீழ்
விள்ளாதஅன்பன் இராமாநுசன் மிக்கசீலமல்லால்
உள்ளாது என்நெஞ்சு* ஒன்றறியேன் எனக்குற்றபேரியல்வே. (2)

பேரியல்நெஞ்சே! அடிபணிந்தேன்உன்னை* பேய்ப்பிறவிப்
பூரியரோடுள்ள சுற்றம்புலத்திப்* பொருவருஞ்சீர்
ஆரியன் செம்மை இராமாநுசமுனிக் கன்புசெய்யும்
சீரியபேறுடையார்* அடிக்கீழ்என்னைச் சேர்த்ததற்கே. (3)

என்னைப்புவியில் ஒருபொருளாக்கி* மருள்சுரந்த
முன்னைப் பழவினைவேரறுத்து* ஊழிமுதல்வனையே
பன்னப்பணித்த இராமாநுசன் பரன்பாதமும்என்
சென்னித்தரிக்கவைத்தான்* எனக்கு ஏதும் சிதைவில்லையே. (4)

எனக்குற்றசெல்வம் இராமாநுசனென்று* இசையகில்லா
மனக்குற்றமாந்தர் பழிக்கில்புகழ்* அவன்மன்னியசீர்
தனக்குற்றஅன்பர் அவன்திருநாமங்கள் சாற்றும்என்பா
இனக்குற்றம்காணகில்லார்* பத்தியேய்ந்த இயல்விதென்றே. (5)

இயலும்பொருளும் இசையத்தொடுத்து* ஈன்கவிகள் அன்பால்
மயல்கொண்டுவாழ்த்தும் இராமாநுசனை* மதியின்மையால்
பயிலும்கவிகளில் பத்தியில்லாத என்பாவிநெஞ்சால்
முயல்கின்றனன்* அவன்தன்பெருங்கீர்த்தி மொழிந்திடவே. (6)

§§மொழியைக்கடக்கும் பெரும்புகழான்* வஞ்சமுக்குறும்பாம்
குழியைக்கடக்கும்நம் கூரத்தாழ்வான்சரண்கூடியபின்*
பழியைக்கடத்தும் இராமாநுசன் புகழ்பாடி அல்லா
வழியைக்கடத்தல்* எனக்கு இனியாதும் வருத்தமன்றே. (7)

வருத்தும்புறவிருள்மாற்ற* எம்பொய்கைப்பிரான்மறையின்
குருத்தின்பொருளையும் செந்தமிழ்தன்னையும்கூட்டி* ஒன்றத்
திரித்தன்றெரித்ததிருவிளக்கைத் தன்திருவுளத்தே
இருத்தும்பரமன்* இராமாநுசன் எம்இறையவனே. (8)

இறைவனைக்காணும் இதயத்திருள்கெட* ஞானமென்னும்
நிறைவிளக்கேற்றிய பூதத்திருவடிதாள்கள்* நெஞ்சத்து
உறையவைத்தாளும் இராமாநுசன் புகழோதும்நல்லோர்
மறையினைக்காத்து* இந்தமண்ணகத்தே மன்னவைப்பவரே. (9)

மன்னியபேரிருள் மாண்டபின்* கோவலுள் மாமலராள்
தன்னெடுமாயனைக் கண்டமைகாட்டும்* தமிழ்த்தலைவன்
பொன்னடிபோற்றும் இராமாநுசற்கு அன்பு பூண்டவர்தாள்
சென்னியில்சூடும்* திருவுடையார் என்றும்சீரியரே. (10)

சீரியநான்மறைச் செம்பொருள்* செந்தமிழாலளித்த
பாரியலும்புகழ்ப்பாண்பெருமாள்* சரணம்பதுமத்
தாரியல்சென்னி இராமாநுசன் தன்னைச்சார்ந்தவர்தாம்
காரியவண்மை* என்னால்சொல்லொணாது இக்கடலிடத்தே. (11)

இடங்கொண்டகீர்த்தி மழிசைக்கிறைவன்* இணையடிப்போது
அடங்குமிதயத்திராமாநுசன்* அப்பொற்பாதமென்றும்
கடங்கொண்டிறைஞ்சும் திருமுனிவர்க்கன்றிக்காதல்செய்யாத்
திடங்கொண்டஞானியர்க்கே* அடியேன்அன்புசெய்வதுவே. (12)

செய்யும் பசுந்துளவத்தொழில்மாலையும்* செந்தமிழில்
பெய்யும் மறைத்தமிழ்மாலையும்* பேராதசீரரங்கத்து
அய்யன் கழற்கணியும்பரன் தாளன்றி ஆதரியா
மெய்யன்* இராமாநுசன் சரணேகதிவேறெனக்கே. (13)

கதிக்குப்பதறி* வெங்கானமும் கல்லும் கடலுமெல்லாம் [சொல்
கொதிக்கத் தவம்செய்யும்கொள்கையற்றேன்* கொல்லிகாவலன்
பதிக்கும்கலைக்கவிபாடும்பெரியவர் பாதங்களே
துதிக்கும்பரமன்* இராமாநுசன் என்னைச் சோர்விலனே. (14)

சோராதகாதல் பெருஞ்சுழிப்பால்* தொல்லைமாலைஒன்றும்
பாராது அவனைப் பல்லாண்டென்றுகாப்பிடும்* பான்மையன்தாள்
பேராதவுள்ளத்திராமாநுசன் தன் பிறங்கியசீர்
சாராமனிசரைச்சேரேன்* எனக்கு என்னதாழ்வினியே? (15)

§§தாழ்வொன்றில்லா மறைதாழ்ந்து* தலமுழுதுங்கலியே
ஆள்கின்றநாள்வந்து அளித்தவன்காண்மின்* அரங்கர்மௌலி
சூழ்கின்றமாலையைச் சூடிக்கொடுத்தவள் தொல்லருளால்
வாழ்கின்றவள்ளல்* இராமாநுசனென்னும்மாமுனியே. (16)

முனியார் துயரங்கள் முந்திலும்* இன்பங்கள் மொய்த்திடினும்
கனியார்மனம் கண்ணமங்கைநின்றானைக்* கலைபரவும்
தனியானையைத் தண்தமிழ் செய்தநீலன்தனக்கு உலகில்
இனியானை* எங்களிராமாநுசனை வந்தெய்தினரே. (17)

எய்தற்கரியமறைகளை* ஆயிரம்இன் தமிழால்
செய்தற்குஉலகில்வரும் சடகோபனைச்* சிந்தையுள்ளே
பெய்தற்கிசையும் பெரியவர்சீரை உயிர்களெல்லாம்
உய்தற்குஉதவும்* இராமாநுசன் எம்உறுதுணையே. (18)

உறுபெருஞ்செல்வமும் தந்தையும்தாயும்* உயர்குருவும்
வெறிதருபூமகள் நாதனும்* மாறன் விளங்கியசீர்
நெறிதரும் செந்தமிழாரணமேயென்று இந்நீணிலத்தோர்
அறிதரநின்ற* இராமாநுசன் எனக்காரமுதே. (19)

ஆரப்பொழில் தென்குருகைப்பிரான்* அமுதத்திருவாய்
ஈரத்தமிழின் இசையுணர்ந்தோர்கட்கு* இனியவர்தம்
சீரைப்பயின்றுய்யும் சீலங்கொள்நாதமுனியை நெஞ்சால்
வாரிப்பருகும்* இராமாநுசன் என்தன்மாநிதியே. (20)

நிதியைப்பொழியும் முகிலென்று* நீசர்தம்வாசல்பற்றித்
துதிகற்றுஉலகில் துவள்குன்றிலேன் இனித்* தூய்நெறிசேர்
எதிகட்கிறைவன் யமுனைத்துறைவன் இணையடியாம்
கதிபெற்றுடைய* இராமாநுசன் என்தன்சேமவைப்பே. (21)

கார்த்திகையானும் கரிமுகத்தானும் கனலும்முக்கண்
மூர்த்தியும் மோடியும் வெப்பும் முதுகிட்டு* மூவுலகும்
பூத்தவனே! என்றுபோற்றிடவாணன் பிழைபொறுத்த
தீர்த்தனையேத்தும்* இராமாநுசன் என்தன்சேமவைப்பே. (22)

வைப்பாய வான்பொருளென்று* நல்லன்பர்மனத்தகத்தே
எப்போதும் வைக்கும் இராமாநுசனை* இருநிலத்தில்
ஒப்பாரிலாத உறுவினையேன் வஞ்சநெஞ்சில்வைத்து [(23)
முப்போதும்வாழ்த்துவன்*என்னும்இதுஅவன்மொய்புகழ்க்கே?

மொய்த்தவெந் தீவினையால் பல்லுடல்தொறும்மூத்து* அதனால்
எய்த்தொழிந்தேன் முனநாள்களெல்லாம்* இன்றுகண்டுயர்ந்தேன்
மொய்த்தவம்போற்றும் புலைச்சமயங்கள் நிலத்தவியக்
கைத்தமெய்ஞ்ஞானத்து* இராமாநுசனென்னும் கார்தன்னை
[யே. (24)

காரேய்கருணைஇராமநுசா !* இக்கடலிடத்தில்
ஆரேயறிபவர் நின்னருளின்தன்மை ?*அல்லலுக்கு
நேரேஉறைவிடம் நான்வந்துநீயென்னையுற்றபின் உன்
சீரேஉயிர்க்குயிராய்* அடியேற்கு இன்றுதித்திக்குமே. (25)

திக்குற்றகீர்த்தி இராமாநுசனை* என்செய்வினையாம்
மெய்க்குற்றம்நீக்கி விளங்கியமேகத்தை* மேவுநல்லோர்
எக்குற்றவாளர் எதுபிறப்புஏதியல்வாக நின்றோர் [(26)
அக்குற்றம் அப்பிறப்பு* அவ்வியல்வே நம்மை ஆட்கொள்ளுமே.

கொள்ளக்குறைவற்றிலங்கிக்* கொழுந்து விட்டோங்கியவுன்
வள்ளல்தனத்தினால் வல்வினையேன்மனம்நீபுகுந்தாய்*
வெள்ளைச்சுடர்விடும்உன்பெருமேன்மைக்கிழுக்கிதென்று
தள்ளுற்றிரங்கும்* இராமாநுசா! என்தனிநெஞ்சமே. (27)

நெஞ்சிற்கறைகொண்டகஞ்சனைக் காய்ந்தநிமலன்* நங்கள்
பஞ்சித்திருவடிப் பின்னைதன் காதலன்* பாதம் நண்ணா
வஞ்சர்க்கரிய இராமாநுசன் புகழன்றி என்வாய்
கொஞ்சிப்பரவகில்லாது* என்னவாழ்வு இன்று கூடியதே! (28)

கூட்டும்விதி என்றுகூடுங்கொலோ?*தென்குருகைப்பிரான்
பாட்டென்னும் வேதப்பசுந்தமிழ்தன்னை* தன்பத்தியென்னும்
வீட்டின்கண்வைத்த இராமாநுசன் புகழ் மெய்யுணர்ந்தோர்
ஈட்டங்கள்தன்னை* என்நாட்டங்கள்கண்டுஇன்பமெய்திடவே. (29)

இன்பந்தரு பெருவீடுவந்தெய்திலென்?* எண்ணிறந்த
துன்பம்தருநிரயம்பலசூழிலென்?* தொல்லுலகில்
மன்பல்லுயிர்கட்கிறையவன் மாயனென மொழிந்த
அன்பன்அனகன்* இராமாநுசன் என்னையாண்டனனே. (30)

ஆண்டுகள்நாள் திங்களாய்* நிகழ்காலமெல்லாம்மனமே!
ஈண்டுபல்யோனிகள்தோறுழல்வோம்* இன்றோரெண்ணின்றியே
காண்தருதோளண்ணல்தென்னத்தியூரர்கழலிணைக்கீழ்ப்
பூண்டவன்பாளன்* இராமாநுசனைப் பொருந்தினமே. (31)

பொருந்தியதேசும் பொறையும்திறலும்* புகழும் நல்ல
திருந்தியஞானமும் செல்வமும்சேரும்* செறுகலியால்
வருந்தியஞாலத்தைவண்மையினால் வந்தெடுத்தளித்த
அருந்தவன்* எங்களிராமாநுசனை யடைபவர்க்கே. (32)

அடையார்கமலத்து அலர்மகள்கேள்வன்* கையாழியென்னும்
படையோடுநாந்தகமும் படர்தண்டும்* ஒண்சார்ங்கவில்லும்*
புடையார்புரிசங்கமும்இந்தப்பூதம்காப்பதற்கென்று
இடையே* இராமாநுசமுனியாயின இந்நிலத்தே. (33)

நிலத்தைச் செறுத்துண்ணும் நீசக்கலியை* நினைப்பரிய
பலத்தைச் செறுத்தும் பிறங்கியதில்லை* என்பெய்வினை தென்
புலத்தில் பொறித்த அப்புத்தகச்சும்மை பொறுக்கியபின்
நலத்தைப் பொறுத்தது* இராமாநுசன்தன் நயப்புகழே. (34)

நயவேன்ஒருதெய்வம் நானிலத்தே* சிலமானிடத்தைப்
புயலேயெனக் கவிபோற்றி செய்யேன்* பொன்னரங்கமென்னில்
மயலே பெருகும் இராமாநுசன் மன்னு மாமலர்த்தாள்
அயரேன்* அருவினை என்னை எவ்வாறுஇன்றடர்ப்பதுவே? (35)

அடல்கொண்டநேமியன் ஆருயிர் நாதன்* அன்று ஆரணச்சொற்
கடல்கொண்டவொண்பொருள் கண்டளிப்ப*பின்னும்காசினியோர்
இடரின்கண்வீழ்ந்திடத்தானுமவ்வொண்பொருள்கொண்டு அவர்
[பின்
படருங்குணன்* எம்இராமாநுசன் தன்படி இதுவே. (36)

படிகொண்டகீர்த்தி இராமாயணமென்னும் பத்திவெள்ளம்*
குடிகொண்டகோயி லிராமாநுசன்குணங்கூறும்* அன்பர்
கடிகொண்டமாமலர்த்தாள் கலந்துள்ளங்கனியும் நல்லோர்
அடிகண்டுகொண்டுகந்து* என்னையும் ஆளவர்க்காக்கினரே. (37)

ஆக்கிஅடிமைநிலைப்பித்தனை என்னைஇன்று* அவமே
போக்கிப் புறத்திட்டதென்பொருளாமுன்பு* புண்ணியர்தம்
வாக்கிற்பிரியா இராமாநுசா! நின்னருளின் வண்ணம்
நோக்கில் தெரிவரிதால்* உரையாய்இந்தநுண்பொருளே. (38)

பொருளும் புதல்வரும்பூமியும்* பூங்குழலாருமென்றே
மருள்கொண்டிளைக்கும் நமக்கு நெஞ்சே! * மற்றுளார்தரமோ?
இருள்கொண்டவெந்துயர்மாற்றித்தன்னீறில் பெரும்புகழே
தெருளும்தெருள்தந்து* இராமாநுசன்செய்யும்சேமங்களே.(39)

சேமநல்வீடும் பொருளும்தருமமும்* சீரியநற்
காமமுமென்றிவை நான்கென்பர்* நான்கினும் கண்ணனுக்கே
ஆமதுகாமம் அறம்பொருள்வீடிதற்கென்றுரைத்தான்
வாமனன்சீலன்* இராமாநுசன் இந்தமண்மிசையே. (40)

மண்மிசை யோனிகள்தோறும்பிறந்து* எங்கள்மாதவனே
கண்ணுறநிற்கிலும் காணகில்லா* உலகோர்களெல்லாம்
அண்ணலிராமாநுசன்வந்துதோன்றியஅப்பொழுதே
நண்ணருஞானம்தலைக்கொண்டு* நாரணற்காயினரே. (41)

ஆயிழையார்கொங்கைதங்கும்* அக்காதலளற்றழுந்தி
மாயும்என்னுவியை வந்தெடுத்தான்இன்று* மாமலராள்
நாயகன் எல்லாவுயிர்கட்கும்நாதன் அரங்கனென்னும்
தூயவன்* தீதிலிராமாநுசன் தொல்லருள்சுரந்தே. (42)

சுரக்கும்திருவும்உணர்வும்* சொலப்புகில்வாயமுதம்
பரக்கும் இருவினைபற்றறவோடும்* படியிலுள்ளீர்!
உரைக்கின்றனன்உமக்குயான் அறம்சீறுமுறுகலியைத்
துரக்கும்பெருமை* இராமாநுசனென்றுசொல்லுமினே. (43)

சொல்லார் தமிழொருமூன்றும்* சுருதிகள்நான்கும்எல்லை
யில்லாஅறநெறியாவுந்தெரிந்தவன்* எண்ணருஞ்சீர்
நல்லார்பரவும்இராமாநுசன்திருநாமம்நம்பிக்
கல்லார் அகலிடத்தோர்* எதுபேறென்றுகாமிப்பரே. (44)

பேறென்றுமற்றில்லை நின்சரணன்றி* அப்பேறளித்தற்கு
ஆறென்றுமில்லை மற்றச்சரணன்றி* என்றுஇப்பொருளைத்
தேறுமவர்க்கும்எனக்கும்உனைத்தந்தசெம்மை சொல்லால்
கூறும்பரமன்று* இராமாநுசா! மெய்ம்மைகூறிடிலே. (45)

கூறும்சமயங்களாறும்குலையக்* குவலயத்தே
மாறன்பணித்த மறையுணர்ந்தோனை* மதியிலியேன்
தேறும்படிஎன்மனம்புகுந்தானைத் திசையனைத்தும்
ஏறும்குணனை* இராமாநுசனைஇறைஞ்சினமே. (46)

இறைஞ்சப்படும்பரன்ஈசனரங்கனென்று* இவ்வுலகத்து
அறஞ்செப்பும் அண்ணல்இராமாநுசன்* என்னருவினையின்
திறஞ்செற்று இரவும்பகலும்விடாது என்தன்சிந்தையுள்ளே
நிறைந்தொப்பறவிருந்தான்* எனக்குஆரும்நிகரில்லையே. (47)

நிகரின்றிநின்ற என்நீசதைக்கு* நின்னருளின்கணன்றிப்
புகலொன்றுமில்லை அருட்கும்அஃதேபுகல்* புன்மையிலோர்
பகரும்பெருமைஇராமாநுசா! இனிநாம்பழுதே
அகலும்பொருளென்?* பயன்இருவோமுக்குமானபின்னே. (48)

ஆனதுசெம்மை யறநெறி* பொய்ம்மை யறுசமயம்
போனதுபொன்றி இறந்ததுவெங்கலி* பூங்கமலத்
தேனதுபாய்வயல் தென்னரங்கன்கழல் சென்னிவைத்துத்
தானதில்மன்னும்* இராமாநுசன்இத்தலத்துதித்தே. (49)

உதிப்பன உத்தமர்சிந்தையுள்* ஒன்னலர் நெஞ்சம்அஞ்சிக்
கொதித்திட மாறிநடப்பன* கொள்ளைவன் குற்றமெல்லாம்
பதித்தஎன்புன்கவிப்பாவினம்பூண்டனபாவுதொல்சீர்
எதித்தலைநாதன்* இராமாநுசன்தன்இணையடியே. (50)

அடியைத்தொடர்ந்தெழும் ஐவர்கட்காய்* அன்றுபாரதப்போர்
முடியப் பரிநெடுந்தேர்விடும்கோனை* முழுதுணர்ந்த
அடியர்க்கமுதம் இராமாநுசன்என்னை யாளவந்து இப்
படியில்பிறந்தது* மற்றில்லைகாரணம் பார்த்திடிலே. (51)

பார்த்தான் அறுசமயங்கள் பதைப்ப*இப்பார்முழுதும்
போர்த்தான்புகழ்கொண்டு புன்மையினேனிடைத்தான்புகுந்து*
தீர்த்தான் இருவினைதீர்த்து அரங்கன்செய்யதாளிணையோடு
ஆர்த்தான்* இவைஎம்மிராமாநுசன் செய்யும் அற்புதமே. (52)

அற்புதன் செம்மை யிராமாநுசன்* என்னை யாளவந்த
கற்பகம் கற்றவர் காமுறுசீலன்* கருதரிய
பற்பல்லுயிர்களும் பல்லுலகுயாவும் பரனதென்னும்
நற்பொருள்தன்னை* இந்நானிலத்தேவந்து நாட்டினனே. (53)

நாட்டிய நீசச்சமயங்கள்மாண்டன*நாரணனைக்
காட்டியவேதம் களிப்புற்றது* தென்குருகைவள்ளல்
வாட்டமிலாவண்தமிழ்மறை வாழ்ந்தது மண்ணுலகில்
நாட்டியசீலத்து* இராமாநுசன் தன் இயல்வுகண்டே. (54)

கண்டவர்சிந்தைகவரும்* கடிபொழில் தென்னரங்கன்
தொண்டர் குலாவும் இராமாநுசனை* தொகையிறந்த
பண்டரு வேதங்கள் பார்மேல் நிலவிடப்பார்த்தருளும்
கொண்டலை மேவித்தொழும்* குடியாம்எங்கள்கோக்குலமே. (55)

கோக்குலமன்னரை மூவெழுகால்*ஒருகூர்மழுவால்
போக்கியவேதனைப் போற்றும்புனிதன்* புவனமெங்கும்
ஆக்கியகீர்த்தி இராமாநுசனை அடைந்தபின் என் [(56)
வாக்கு உரையாது* என்மனம்நினையாது இனிமற்றொன்றையே.

மற்றொருபேறு மதியாது* அரங்கன்மலரடிக்குஆள்
உற்றவரே தனக்குஉற்றவராக்கொள்ளும் உத்தமனை*
நற்றவர்போற்றும் இராமாநுசனை இந்நானிலத்தே
பெற்றனன்* பெற்றபின் மற்றறியேன் ஒரு பேதைமையே. (57)

பேதையர் வேதப்பொருளிதென்று உன்னி* பிரமம் நன்றென்று
ஓதி மற்றெல்லாவுயிரும் அஃதென்று* உயிர்கள் மெய்விட்டு
ஆதிப்பரனோ டொன்றுமென்றுசொல்லும் அவ்வல்லலெல்லாம்
வாதில்வென்றான்* எம் இராமாநுசன் மெய்ம்மதிக்கடலே. (58)

கடலளவாய திசையெட்டினுள்ளும்* கலியிருளே
மிடைதருகாலத்து இராமாநுசன்* மிக்கநான்மறையின்
சுடரொளியால் அவ்விருளைத் துரத்திலனேல் உயிரை
யுடையவன்* நாரணனென்றறிவாரில்லைஉற்றுணர்ந்தே. (59)

உணர்ந்த மெய்ஞ்ஞானியர் யோகந்தொறும்* திருவாய்மொழியின்
மணந்தரும் இன்னிசை மன்னுமிடந்தொறும்* மாமலராள்
புணர்ந்த பொன்மார்பன் பொருந்தும் பதிதொறும்புக்குநிற்கும்
குணந்திகழ் கொண்டல்* இராமாநுசன் எம்குலக்கொழுந்தே.
[(60)

கொழுந்துவிட்டோடிப்படரும் வெங்கோள்வினையால்* நிரயத்து
அழுந்தியிட்டேனை வந்தாட்கொண்டபின்னும்* அருமுனிவர்
தொழும் தவத்தோன் எம் இராமாநுசன் தொல்புகழ்சுடர்மிக்கு
எழுந்தது* அத்தால்நல்லதிசயம் கண்டது இருநிலமே. (61)

இருந்தேன்இருவினைப்பாசம்கழற்றி* இன்றுயான்இறையும்
வருந்தேன்இனி எம் இராமாநுசன்* மன்னு மாமலர்த்தாள்
பொருந்தாநிலையுடைப்புன்மையினோர்க்கு ஒன்றும்நன்மை
[செய்யாப்
பெருந்தேவரைப்பரவும்* பெரியோர்தம்கழல்பிடித்தே. (62)

பிடியைத்தொடரும் களிறென்ன* யான்உன்பிறங்கியசீர்
அடியைத்தொடரும்படி நல்கவேண்டும்* அறுசமயச்
செடியைத்தொடரும் மருள்செறிந்தோர்சிதைந்தோடவந்து இப்
படியைத்தொடரும்* இராமாநுசா! மிக்கபண்டிதனே! (63)

பண்டருமாறன் பசுந்தமிழ்* ஆனந்தம்பாய்மதமாய்
விண்டிட எங்களிராமாநுசமுனிவேழம்* மெய்ம்மை
கொண்டநல்வேதக் கொழுந்தண்டமேந்திக் குவலயத்தே
மண்டிவந்தேன்றது* வாதியர்காள்! உங்கள் வாழ்வற்றதே. (64)

வாழ்வற்றது தொல்லைவாதியர்க்கு* என்றும்மறையவர்தம்
தாழ்வற்றது தவம்தாரணிபெற்றது* தத்துவநூல்

கூழற்றது குற்றமெல்லாம்பதித்தகுணத்தினர்க்குஅந்
நாழற்றது* நம்இராமாநுசன்தந்தஞானத்திலே. (65)

ஞானம்கனிந்த நலங்கொண்டு* நாள்தொறும்நைபவர்க்கு
வானம்கொடுப்பது மாதவன்* வல்வினையேன்மனத்தில்
ஈனம் கடிந்த இராமாநுசன்தன்னையெய்தினர்க்கு அத்
தானம்கொடுப்பது* தன்தகவென்னும் சரண்கொடுத்தே. (66)

சரணமடைந்த தருமனுக்காப்* பண்டுநூற்றுவரை
மரணமடைவித்த மாயவன்* தன்னை வணங்கவைத்த
கரணமிவை உமக்கன்றென்றுஇராமாநுசன் உயிர்கட்கு
அரணங்கமைத்திலனேல்* அரணார் மற்றிவ்வாருயிர்க்கே? (67)

ஆரெனக்கின்று நிகர்சொல்லில்? மாயன்அன்றுஐவர்தெய்வத்
தேரினில் செப்பியகீதையின்* செம்மைப்பொருள்தெரியப்
பாரினில் சொன்ன இராமாநுசனைப்பணியும்நல்லோர்
சீரினில்சென்றுபணிந்தது* என்ஆவியும்சிந்தையுமே. (68)

சிந்தையினோடுகரணங்கள் யாவும்சிதைந்து* முன்னாள்
அந்தமுற்றாழ்ந்ததுகண்டு* அவையென்தனக்கன்றருளால்
தந்த அரங்கனும்தன் சரண்தந்திலன் தானதுதந்து*
எந்தைஇராமாநுசன் வந்தெடுத்தனன் இன்று என்னையே. (69)

என்னையும்பார்த்து என்னியல்வையும்பார்த்து* எண்ணில்பல்
[குணத்த
உன்னையும்பார்க்கில் அருள்செய்வதேநலம்* அன்றிஎன்பால்
பின்னையும்பார்க்கில்நலமுளதே? உன் பெருங்கருணை
தன்னை என்பார்ப்பர்?* இராமாநுசா! உன்னைச்சார்ந்தவரே.
[(70)

சார்ந்ததுஎன்சிந்தை உன்தாளிணைக்கீழ்*அன்புதான்மிகவும்
கூர்ந்தது அத்தாமரைத்தாள்களுக்கு* உன்தன் குணங்களுக்கே
தீர்ந்ததுஎன்செய்கைமுன்செய்வினை நீசெய்வினையதனால்
பேர்ந்தது* வண்மைஇராமாநுசா! எம்பெருந்தகையே! (71)

கைத்தனன் தீயசமயக்கலகரை* காசினிக்கே
உய்த்தனன் தூயமறைநெறிதன்னை* என்றுஉன்னிஉள்ளம்
நெய்த்தவன்போடிருந்தேத்தும் நிறைபுகழோருடனே
வைத்தனன்என்னை* இராமாநுசன் மிக்கவண்மைசெய்தே. (72)

வண்மையினுலும் தன்மாதகவாலும்* மதிபுரையும்
தண்மையினுலும் இத்தாரணியோர்கட்குத்* தான்சரணுய்
உண்மைநன்ஞான முரைத்த இராமாநுசனையுன்னும்
திண்மையல்லால் எனக்கில்லை* மற்ருேர்நிலைதேர்ந்திடிலே. (73)

தேரார் மறையின்திறமென்று* மாயவன்தீயவரைக்
கூராழிகொண்டுகுறைப்பது* கொண்டலனையவண்மை
ஏரார்குணத்தெம்மிராமாநுசன் அவ்வெழில் மறையில்
சேராதவரைச்சிதைப்பது* அப்போதுஒருசிந்தைசெய்தே. (74)

செய்த்தலைச்சங்கம் செழுமுத்தமீனும்* திருவரங்கர்
கைத்தலத்தாழியும் சங்கமுமேந்தி* நங்கண்முகப்பே
மொய்த்தலைத்துஉன்னைவிடேனென்றிருக்கிலும் நின்புகழே [(75)
மொய்த்தலைக்கும்வந்து* இராமாநுசா! என்னைமுற்றும்நின்றே.

நின்றவண்கீர்த்தியும் நீள்புனலும்* நிறைவேங்கடப்பொற்
குன்றமும்வைகுந்தநாடும் குலவியபாற்கடலும்*
உன்தனக்குஎத்தனையின்பந்தரும்உன்னிணைமலர்த்தாள்
என்தனக்கும்அது இராமாநுசா! இவையீந்தருளே. (76)

ஈந்தனன்ஈயாதஇன்னருள்* எண்ணில்மறைக்குறும்பைப்
பாய்ந்தனன் அம்மறைப்பல்பொருளால்* இப்படியனைத்தும்
ஏய்ந்தனன்கீர்த்தியினுல்என்வினைகளை வேர்பறியக்
காய்ந்தனன்* வண்மைஇராமாநுசற்குஎன்கருத்தினியே? (77)

கருத்தில்புகுந்து உள்ளில்கள்ளம்கழற்றி* கருதரிய
வருத்தத்தினுல் மிகவஞ்சித்து* நீஇந்தமண்ணகத்தே
திருத்தித்திருமகள்கேள்வனுக்காக்கியபின் என்நெஞ்சில் [(78)
பொருத்தப்படாது*எம்இராமாநுசா! மற்ருேர்பொய்ப்பொருளே.

பொய்யைச்சுரக்கும் பொருளைத்துரந்து* இந்தப்பூதலத்தே
மெய்யைப்புரக்கும் இராமாநுசன்நிற்க* வேறுநம்மை
உய்யக்கொள்ளவல்லதெய்வம்இங்குயாதென்று உலர்ந்து அவமே
ஐயப்படாநிற்பர்* வையத்துள்ளோர் நல்லறிவிழந்தே. (79)

நல்லார்பரவும் இராமாநுசன்* திருநாமம்நம்ப
வல்லார்திறத்தை மறவாதவர்கள்எவர்* அவர்க்கே
எல்லாவிடத்திலும்என்றும்எப்போதிலும்எத்தொழும்பும்
சொல்லால்மனத்தால்* கருமத்தினுல் செய்வன் சோர்வின்றியே.(80)

சோர்வின்றி உன்தன் துணையடிக்கீழ்* தொண்டுபட்டவர்பால்
சார்வின்றிநின்றஎனக்கு* அரங்கன்செய்யதாளிணைகள்
பேர்வின்றியின்றுபெறுத்தும்இராமாநுசா ! இனிஉன்
சீரொன்றியகருணைக்கு* இல்லைமாறுதெரிவுறிலே. (81)

தெரிவுற்றஞானம் செறியப்பெருது* வெந்தீவினையால்
உருவற்ற ஞானத்து உழல்கின்றஎன்னை* ஒருபொழுதில்
பொருவற்றகேள்வியனுக்கிநின்றான் என்னபுண்ணியனோ ?
தெரிவுற்றகீர்த்தி* இராமாநுசனென்னும்சீர்முகிலே. (82)

சீர்கொண்டு பேரறம்செய்து* நல்வீடு செறிதுமென்னும்
பார்கொண்டமேன்மையர் கூட்டனல்லேன்* உன்பதயுகமாம்
ஏர்கொண்ட வீட்டைஎளிதினிலெய்துவன் உன்னுடைய
கார்கொண்டவண்மை* இராமாநுசா! இதுகண்டுகொள்ளே.(83)

கண்டுகொண்டேன் எம்இராமாநுசன்தன்னை* காண்டலுமே
தொண்டு கொண்டேன் அவன்தொண்டர்பொற்றாளில்* என்
[தொல்லைவெந்நோய்
விண்டுகொண்டேன் அவன்சீர்வெள்ளவாரியைவாய்மடுத்து இன்று
உண்டுகொண்டேன் இன்னம்உற்றனவோதில் உலப்பில்லையே.
(84)

ஓதியவேதத்தின் உட்பொருளாய்* அதனுச்சிமிக்க
சோதியைநாதனென அறியாது உழல்கின்றதொண்டர்*
பேதைமை தீர்த்தஇராமாநுசனைத் தொழும்பெரியோர்
பாதமல்லால்என்தன்ஆருயிர்க்கு* யாதொன்றும் பற்றில்லையே.
[(85)

பற்று மனிசரைப்பற்றி* அப்பற்றுவிடாதவரே
உற்றாரெனவுழன்று ஓடிநையேன்இனி* ஒள்ளியநூல்
கற்றார்பரவும் இராமாநுசனைக் கருதுமுள்ளம்
பெற்றார்யவர் அவர்எம்மைநின்றாளும்பெரியவரே. (86)

பெரியவர்பேசிலும் பேதையர்பேசிலும்* தன்குணங்கட்கு
உரியசொல்என்றுமுடையவனென்றென்று* உணர்வின்மிக்கோர்
தெரியும்வண்கீர்த்தி இராமாநுசன் மறைதேர்ந்துஉலகில்
புரியுநன்ஞானம்* பொருந்தாதவரைப் பொரும்கலியே. (87)

§§கலிமிக்கசெந்நெல் கழனிக்குறையல்* கலைப்பெருமான்
ஒலிமிக்கபாடலைஉண்டு தன்னுள்ளம்தடித்து* அதனால்

வலிமிக்கசீயம் இராமாநுசன் மறைவாதியராம்
புலிமிக்கதென்று* இப்புவனத்தில்வந்தமைபோற்றுவனே. (88)

போற்றரும் சீலத்து இராமாநுசா!* நின்புகழ்தெரிந்து
சாற்றுவனேல் அதுதாழ்வு* அதுதீரில் உன்சீர்தனக்குஓர்
ஏற்றமென்றே கொண்டிருக்கிலும் என்மனம் ஏத்தியன்றி
ஆற்றகில்லாது* இதற்குஎன்னினைவாயென்றிட்டு அஞ்சுவனே.
[(89)

நினையார்பிறவியை நீக்கும்பிரானை* இந்நீள்நிலத்தே
எனையாளவந்த இராமாநுசனை* இருங்கவிகள்
புனையார், புனையும் பெரியவர்தாள்களில் பூந்தொடையல்
வனையார் பிறப்பில்வருந்துவர் மாந்தர்மருள்சுரந்தே. (90)

மருள்சுரந்து ஆகமவாதியர்கூறும்* அவப்பொருளாம்
இருள்சுரந்தெய்த்த உலகிருள்நீங்க* தன்னீண்டியசீர்
அருள்சுரந்து எல்லாவுயிர்கட்கும்நாதன் அரங்கனெனும்
பொருள்சுரந்தான்* எம் இராமாநுசன் மிக்கபுண்ணியனே.(91)

புண்ணியநோன்பு புரிந்துமிலேன்* அடிபோற்றிசெய்யும்
நுண்ணருங்கேள்வி நுவன்றுமிலேன்* செம்மைநூற்புலவர்க்கு
எண்ணருங்கீர்த்தி இராமாநுசா இன்றுநீபுகுந்து என்
கண்ணுள்ளும்நெஞ்சுள்ளும்* நின்றஇக்காரணம் கட்டுரையே.(92)

கட்டப்பொருளை மறைப்பொருளென்று* கயவர்சொல்லும்
பெட்டைக்கெடுக்கும் பிரானல்லனே*? என்பெருவினையைக்
கிட்டிக்கிழங்கொடு தன்னருளென்னுமொள்வாளுருவி
வெட்டிக்களைந்த* இராமாநுசனென்னும் மெய்த்தவனே. (93)

தவந்தரும் செல்வம்தகவும்தரும்* சரியாப்பிறவி
பவம்தரும் தீவினைபாற்றித்தரும்* பரந்தாமமென்னும்
திவம்தரும் தீதிலிராமாநுசன் தன்னைச்சார்ந்தவர்கட்கு
உவந்தருந்தேன்* அவன்சீரன்றி யான்ஒன்றும்உள்மகிழ்ந்தே.(94)

உண்ணின்றுஉயிர்களுக்கு உற்றனவேசெய்து* அவர்க்குஉயவே
பண்ணும்பரனும் பரிவிலனும்படி* பல்லுயிர்க்கும்
விண்ணின்தலைநின்று வீடளிப்பான் எம் இராமாநுசன்
மண்ணின்தலத்து உதித்து* உய்மறைநாலும்வளர்த்தனனே.(95)

வளரும்பிணிகொண்ட வல்வினையால்* மிக்கநல்வினையில்
கிளரும்துணிவு கிடைத்தறியாது* முடைத்தலையூன்
தளருமளவும் தரித்தும்விழுந்தும் தனிதிரிவேற்கு
உளர் எம்இறைவர்* இராமாநுசன் தன்னையுற்றவரே. (96)

தன்னையுற்றுஆட்செய்யும் தன்மையினோர்* மன்னுதாமரைத்தாள்
தன்னையுற்றுஆட்செய்ய என்னையுற்றான்இன்று* தன்தகவால்
தன்னையுற்றாரன்றித் தன்மையுற்றாரில்லையென்றறிந்து
தன்னையுற்றாரை* இராமாநுசன்குணம் சாற்றிடுமே. (97)

§§இடுமே இனியசுவர்க்கத்தில் ?* இன்னும்நரகிலிட்டுச்
சுடுமே ? அவற்றைத்தொடர்தருதொல்லை* சுழல்பிறப்பில்
நடுமே? இனிநம் இராமாநுசன் நம்மைநம்வசத்தே
விடுமே? சரணமென்றால்* மனமே! நையல்மேவுதற்கே. (98)

தற்கச்சமணரும் சாக்கியப்பேய்களும்* தாழ்சடையோன்
சொற்கற்றசோம்பரும் சூனியவாதரும்* நான்மறையும்
நிற்கக்குறும்புசெய் நீசரும்மாண்டனர் நீள்நிலத்தே
பொற்கற்பகம்* எம் இராமாநுசமுனி போந்தபின்னே. (99)

போந்ததென்னெஞ்சென்னும் பொன்வண்டு* உனதடிப்போதில்
ராந்தெளிதேனுண்டு அமர்ந்திடவேண்டி* நின்பாலதுவே [ஒண்சீ
ஈந்திடவேண்டும் இராமாநுசா! இதுவன்றி ஒன்றும்
மாந்தகில்லாது* இனிமற்றொன்றுகாட்டிமயக்கிடலே. (100)

மயக்கும்இருவினை வல்லியில்பூண்டு* மதிமயங்கித்
துயக்கும்பிறவியில் தோன்றியஎன்னை* துயரகற்றி
உயக்கொண்டுநல்கும் இராமாநுசா! என்றதுஉன்னையுன்னி
நயக்குமவர்க்குஇதுஇழுக்கென்பர்* நல்லவரென்றுநைந்தே. (101)

நையும்மனம் உன்குணங்களையுன்னி* என்நாவிருந்துஎம்
ஐயனிராமாநுசனென்றழைக்கும்* அருவினையேன்
கையும்தொழும் கண்கருதிடும் காணக்கடல்புடைசூழ்
வையமிதனில்*உன்வண்மை என்பால்என்வளர்ந்ததுவே? (102)

வளர்ந்தவெங்கோப மடங்கலொன்றாய்* அன்றுவாளவுணன்
கிளர்ந்த பொன்னாகம்கிழித்தவன்* கீர்த்திப்பயிரெழுந்து
விளைந்திடும்சிந்தை இராமாநுசன் என்தன் மெய்வினைநோய்
களைந்து நன்ஞானமளித்தனன்* கையில்கனியென்னவே. (103)

கையில்கனியென்னக் கண்ணனைக்காட்டித்தரிலும்* உன்தன்
மெய்யில்பிறங்கியசீரன்றி வேண்டிலன்யான்* நிரயத்
தொய்யில்கிடக்கிலும் சோதிவிண்சேரிலும் இவ்வருள்நீ
செய்யில்தரிப்பன்* இராமாநுசா! என்செழுங்கொண்டலே!(104)

§§செழுந்திரைப்பாற்கடல் கண்துயில்மாயன்* திருவடிக்கீழ்
விழுந்திருப்பார்நெஞ்சில் மேவுநன்ஞானி* நல்வேதியர்கள்
தொழும்திருப்பாதனிராமாநுசனைத் தொழும் பெரியோர்
எழுந்திரைத்தாடும்இடம்* அடியேனுக்கு இருப்பிடமே. (105)

§§இருப்பிடம் வைகுந்தம்வேங்கடம்* மாலிருஞ்சோலையென்னும்
பொருப்பிடம் மாயனுக்கென்பர்நல்லோர்*அவைதன்னொடும்வந்து
இருப்பிடம் மாயன் இராமாநுசன் மனத்து இன்றுஅவன்வந்து
இருப்பிடம்* என்தனிதயத்துள்ளே தனக்கின்புறவே. (106)

§§இன்புற்றசீலத்து இராமாநுசா!* என்றும் எவ்விடத்தும்
என்புற்றநோயுடல்தோறும் பிறந்துஇறந்து* எண்ணரிய
துன்புற்றுவீயினும் சொல்லுவதொன்றுண்டு உன்தொண்டர்
[கட்கே
அன்புற்றிருக்கும்படி* என்னையாக்கி அங்காட்படுத்தே. (107)

§§அங்கயல்பாய்வயல் தென்னரங்கன்* அணியாகமன்னும்
பங்கயமாமலர்ப்பாவையைப் போற்றுதும்* பத்தியெல்லாம்
தங்கியதென்னத்தழைத்து நெஞ்சே! நம்தலைமிசையே
பொங்கியகீர்த்தி* இராமாநுசனடிப்பூமன்னவே. (108)

ஸ்ரீ:

ஸ்ரீமான் ஏ. வெ. விலக்ஷணகவி—இராமாநுஜ நாவலர்

அவர்கள் இயற்றிய

ஸ்ரீ எதிராஜ சதகம்

தனியன்

நேரிசை வெண்பா

காலன் குறுகான் கடும்பிறவி சாரா து
மாலின் றனிச்சுகத்தின் மன்னிடலாம்—சீலமுறும்
பாவமிலா நெஞ்சே !நீ பண்பனிரா மாநுசனும்
நாவலன்செந் தாமரைத்தா ளடு.

—(புதுவை–ஸ்ரீவைஷ்ணவ நம்பி).

தத்துவங்கண் மூன்றுந் தனிமந்திர மூன்றும்
இத்தகைய வென்றுணர்ந்த வென்னெஞ்சே! —நித்தநித்தம்
சாற்றுதிரா மாநுசனுஞ் சாந்தகுண நாவன்சீர்
போற்றுதியன் னுன்சரணப் பூ.

—(இராமாநுஜ தாசர்).

காப்பு.

உலகாக்கியே யுணவாக்கியே யுலைவாக்கியே யுலவா நலத்
தலமாக்கியே தணவாதவைந் தாகும்பொரு டகையோ துறும்
கலையாக்கியே காத்தாளுவான் கவிநாதவென் கடுவாணவ
வலைநீக்கியே வழிகாட்டியாள் வரயோகியே வரயோகியே. (1)

என்சந்தமீ சன்சந்தமா விருள்சந்தமவ் விருணீக்குறும்
மன்சந்தமீ மகிழ்சந்தமும் மறைமத்தமும் மதுவித்தையைத்
தன்சந்தமார் தயைவிம்மலாற் றரைவீசுதா யானுன்மிளிர்
தென்சந்தமார்ந் திடவேத்தினேன் றிருக்கோவலூர் திருக்கோவ
[லூர். (2)

நூல்.

பூமாநிறம் பொருமாமுதற் பொன்னுரவிந் தப்பூநலம்
நாமாறிலா வகையுற்றுற நாராயணன் றனேயும்விடுத்
தாமாறிலோ திடவந்தபூ தூராஃனநீ யகமுன்னலில்
ஏமாறிடா தேநெஞ்சமே! யெதிராசனே யெதிராசனே. (1)

ஆருயிர முகமாறியீ ராருயிர நாமாறிவான்
பேராயிரம் பெம்மானதாம் பேருக்கிட வந்தானவன்
சேராயிரம் பேராசைதே வற்றுரிலாச் சேருழ்ந்தனம்
ஏராயிர மெணியேத்துவா யெதிராசனே யெதிராசனே. (2)

மூலத்துமா யாவாணவ முதுநோயினுன் மொத்தாடினும்
சாலத்துமா பதிகாணருந் தண்டாமஞ்சார்ந் துறவாயினும்
ஆலத்துவாய் பவன்மெல்லணே யாகும்பிரா னெனினந்தமக்
கேலத்துய ரென்னெஞ்சமே! யெதிராசனே யெதிராசனே. (3)

கடன்வெஃகுமா கமலேக்கிணே யாகக்கழ றுதலுக்கிணேத்
திடன்மண்டுநூல் கடன்மாந்திஞேன் றெளியாதவப் பிரகாசனென்
றிடுமன்னவ னிடமோதினு னிரண்டென்றவ னிருணீக்கினுன்
எடல்வேறுசீ ரினேநெஞ்சமே யெதிராசனே யெதிராசனே. (4)

காத்தூட்டுவான் பொறிமாவுடன் கலந்தோடியோர் காட்டிற்குளே
நாத்தூக்குதே நாரம்மிலேம் நாமென்செய்கே மெனவந்தவர்
தீர்த்தங்கொளத் தினமீய்ந்தனே திருவாதிரைத் தினம்வந்தனே
ஏத்தற்கெனு லெண்ணுசுதீ ரெதிராசனே யெதிராசனே. (5)

புகைபுக்கினும் போகாக்குறும் பொறைசூழுமா விந்தத்திலே
பகைபுக்குணு மாயாமதப் பாவக்குழு விற்கெட்டிடா
வகைபுக்கியெம் மவர்வாழ்ந்திட வரதன்வழி வந்தாண்டவன்
எகைபுக்குநீ தொழுநாதுதி யெதிராசனே யெதிராசனே. (6)

பரவாதிக ளேவற்பசா சங்கட்கெலாம் படுதொண்டராப்
புரமோதிடப் போவேற்கெலாம் புணேயாகிமீப் புரமேற்றிஞய்
குருவேகுரு பரனேபரன் குளிர்வாசமாங் கோயிற்பிரான்
எருதேறினுன் காணுனடிக் கெதிராசனே யெதிராசனே. (7)

மன்னுவிகண் மாயாச்சுக மதுபெற்றிடப் பேயின்றலேத்
தன்னுரவிந் தம்மிட்டனே தகையாமண மகனுயினே

பன்னாளும்வெந் தவமாற்றினும் பலியாதநின் பததாமரை
என்னுமன்மூ கற்காக்கினை யெதிராசனே யெதிராசனே. (8)

முக்கோலமா முனியாயினை முனியிந்திர னெனவோங்கினை
அக்கோலமா யாவாதிகோ லடியுண்ணுமுக் கோலீந்தனை
செக்கோலக்கூ றைக்கட்டினய் திருக்கச்சிநம் பிக்கன்பினய்
எக்காலுமெற் கேயத்தமா மெதிராசனே யெதிராசனே. (9)

அன்பென்பதோ ரணுவும்மிலே னதுசொல்லவு மருளும்மிலேன்
துன்பென்பதோ தொலையாவிலேன் றுலையாயெனச் சொலவும்
[மிலேன்
முன்புள்ளவா ணவநீக்கியுன் முத்தர்க்கடிப் பொடியாக்குவாய்
என்னின்பமே யென்றெய்வமே யெதிராசனே யெதிராசனே.
[(10)

தன்கண்ணுளே னுறற்பவந் தணியேனென வென்றம்பிரான்
நின்கண்ணுளே யுறவாக்கின னீயாரிய னிலைகாட்டினய்
மன்கண்ணுள மநுவிட்டுமென் வடிவின்னதாம் வழிகாட்டியும்
என்கண்ணுள நவைநீக்கிலே னெதிராசனே யெதிராசனே.
[(11)

உன்சொல்லையா முறுதிக்கொளா துலைவாகுவோ மென்றேவருள்
மன்சொல்லினே ராறுப்பொருண் மாகச்சிநம் பிக்கண்கொடுப்
பின்சொல்லுபா டியமாதியாற் பேணிப்புரந் தருண்மாதவ
என்சொல்லியா னிசைகூறுகே னெதிராசனே யெதிராசனே.
[(12)

ஏனித்தனை நாளாவெனை யெண்ணுதபா தகனுயினை
நீநித்தமென் றிடின்யான்புரி நிலையுற்றதீ நெறியெண்ணியே
நானித்தனை நாணுகினே னனிபீதியா லொளிவெய்தினேன்
ஈனத்தன்யா னென்செய்குவே னெதிராசனே யெதிராசனே.
[(13)

கலைமாதுவாழ்த் தெடுபாடியக் கவிநாதசெந் தமிழ்வேதமாம்
அலைமீதெழு மம்மான்விழு மதிமோகமெல் லணையாகிய
தலைவாகுருத் திரளுக்கெலாந் தழலேமதத் தூலக்கெலாம்
இலையாயருட் கெதிராயினே னெதிராசனே யெதிராசனே.(14)

அருளாளனீய்ந் தருள்வித்தமே யதியாளவந் தவரத்தமே
தெருளாமலர்ந் திடவாக்கிய தெளிவேதவே தியகோட்டியூர்

பெரியோனிடங் கழலோய்ந்திடம் பெயர்ந்தேமநுப் பெற்றப்பினர்
எரிவீழ்கிலா தருள்செய்தனே யெதிராசனே யெதிராசனே.
[(15)

வடவேங்கடத் தப்பற்குநல் வளையாழிதந் தனைதென்குறுங்
குடிநாரணக் கோமாற்குமந் திரமோதிவான் குறைநீக்கினை
செடிதீருநா ரணனைக்களிச் செல்வச்சுத னுப்பெற்றனை
இடிசேருதீப் பெறுவானரு ளெதிராசனே யெதிராசனே. (16)

நாயெத்தனைத் துதிகூறினு நன்றுருகுமோ நாயேன்றுதி [டவன்
பேயத்தனைப் பெண்கொண்டவன் புவியத்தனைப் பிழைகொண்
காயத்தனைத் தாணென்றவன் காண்பூப்பொனே கதியென்றவன்
ஏயத்தினை யுருவானவ னெதிராசனே யெதிராசனே. (17)

பத்தாறுவே டத்தானுமே பற்றுமன்மாழ் குறுவான்மகி
ழத்தானுவெண் கோடிப் புனைந் தகன்மாநிலத் தாவிக்குழு
வைத்தாழ்விலா வின்பாகுவை யத்தான்மகி ழுறவீந்தருள்
எய்த்தேன்விடா தெனையாள்குவா யெதிராசனே யெதிராச
[னே. (18)

பல்லாயிரங் கலைதேர்ந்தவ ராசீவக மதபண்டித
வல்லாருட னேர்வேலையே வலியாயிர வதநங்கொடோர்
சொல்லாடிவென் றமணக்குழுச் செக்கிற்றிரித் தரசன்முனே
எல்லாருங்கண் டிறும்பூதுறு மெதிராசனே யெதிராசனே.
[(19)

முகமொன்றிலா யிரவாநந முந்தக்கொடோர் பலபாடையால்
அகமொன்றுநா நாபேதமா வறையும்மதத் தவரீட்டமிக்
ககமொன்றுநீட் கழுமாமரங் கவ்விக்கிடந் திடவாதுவெல்
இகமொன்றுவா னகமீந்தரு ளெதிராசனே யெதிராசனே.
[(20)

இன்தென்கலை யினிதோதின தெதுவோவது வன்றேமுனே
மன்றின்பமா நூற்றெட்டென வழங்கும்பதி யவைமாசற
நன்றின்பமாப் புதிதாக்கிட நாடெங்கினு மோடோடிவா
தென்றெங்குநன் றீவானெழு மெதிராசனே யெதிராசனே.
[(21)

திருமாமுத லடியார்பவந் தொலையக்குலை தேவில்லெலாம்
ஒருமாமுதற் காமாறுநன் றுறவாக்கியே யொருதேவனைத்

தெரியாதுபற் பலவெண்ணிமாழ் குநர்க் குண்மையைத் தெளிவாக்
[கிய
எரிநாளில்வந் தவன்றம்பியே யெதிராசனே யெதிராசனே.
[(22)

சைவப்பெருஞ் சைலாசநி சமணப்பனி தணிஞாயிறு
பொய்யொப்பிலா மாயாமதப் பொதிசுட்டெரி தீப்புண்ணியர்
கையொப்பிலா புத்தப்பணி கருகும்பெருங் ககராட்டென
எய்தற்கரும் பேருனவா வெதிராசனே யெதிராசனே. (23)

பொறியைப்பொலி யாதாக்கினுய் புலனைச்சலி யாதாக்கினுய்
வெறியைச்செயுங் கரணக்கரி வீவட்புலி வீருக்கினுய்
கறியைச்செயுங் காமாதிகால் கடிதுண்ணுகட் செவியாயினுய் [(24)
எறியைச்செயு மெனையாண்டரு ளெதிராசனே யெதிராசனே.

பன்மாமத மாயாவிருள் பாறச்சிவப் புடைசுற்றியே
கன்மாமனம் வாக்காக்கையை கலித்தாமெனு முக்கோல்கொடு
தன்மாமலர்ப் பதஞ்சார்குவார் சதிரானவிண் ணுடேறுவார்
என்னுதனே பொன்னுதனு ரெதிராசனே யெதிராசனே. (25)

உனையேத்திலார் பவமோயுமோ வுனைவாழ்த்திலார் நரகோயுமோ
தனையேதனக் கிணையானவன் றரைவானுன தாணைக்குளே
நினையேநினை ந் தீந்துள்ளது நெறிதேர்ந்தவர் நினைவுள்ளகாண்
எனையேன்றுகொண் டுன்பத்தியீ யெதிராசனே யெதி
[ராசனே. (26)

காமக்கொடுங் கண்மாந்தினேன் கதமாகுவெந் தடிமேவினேன்
வாமப்பெரு மதமச்சர மாகுங்கலைப் பூண்மேவினேன்
சீமத்தன்மாக் களவாடிதீத் திறனுனவ னகமேறினேன்
ஏமத்தனென் றிகழாதரு ளெதிராசனே யெதிராசனே. (27)

ஆசாரமோ சரகுண்ணிநல் லநுட்டானமோ வூர்க்கோலமாம்
காசாசையோ நீரட்டையாங் கனியாசவே சரியேசரி
பாசாசரோ பகர்தற்கொணுப் பரதேசிகா பரிவோடெனை
ஏசாதுகாத் தருள்பூதூர்வா ழெதிராசனே யெதிராசனே. (28)

எல்லேயிளங் கிளியேயெனு மெமதம்மையாந் தம்மண்ணரே
அல்லும்பக லும்மாழ்கிவீ ழாழ்வார்விடும் வரிவண்டரே
சொல்லாதுகொண் மின்காணெனுச் சொன்னுர்தமெம் பெருமாவுனை
யில்லாதவ ரில்லாதவ ரெதிராசனே யெதிராசனே. (29)

வஞ்சத்திலோ கடலானவன் வளர்பொய்யிலோ மலையானவன்
பஞ்சத்தினும் பதருந்தராப் பழிலோபகாஞ் சிரமானவன்
நஞ்சத்தினு நனிதீயன்யா னுனும்பிறப் பறவெண்ணினேன் [(30)
எஞ்சத்துளே னெனையாள்குவா யெதிராசனே யெதிராசனே.

ஒன்றேனுநன் றுணராதவ னொருபோதுமே பணியாதவன்
பொன்றுதமூ வாசைச்சுழிப் புரண்டாடுபுன் புலையர்க்குளேன்
நன்றீதுதீ தென்றேதுநா னனியோதிலே னினையோதிலேன்
என்றாலுநீ யெனைவிட்டிடே லெதிராசனே யெதிராசனே. (31)

பெண்ணாயினர் கண்ணேயினும் பிறழன்னரல் குன்றேயினும்
அண்ணுந்தெழுங் குயநோயினு மவர்வாயழ குடனேயினும்
பண்ணுவுடல் பலகோடியான் படுபீழைபா ரதமாகுமே [(32)
எண்ணுதெனை யினிதாளுவா யெதிராசனே யெதிராசனே.

என்போலயா ரியானென்றவ னென்போலயா ரெனதென்றவன்
என்போலயார் பழிசெய்தவ னென்போலயார் நன்றற்றவன்
இன்பாநல மொன்றேனுநன் றியலோடுதேர்ந் திலனையனே [(33)
என்பாவமோ வென்சன்மமோ வெதிராசனே யெதிராசனே.

என்றீமைகண் டெமன்வெள்கின னெழுத்தாடுவான் கழுத்
நன்றும்விதி குன்றாயின னாராயண னலிவெய்தினன் [தாடினன்
நின்றுகுமைந் தாம்பூதமு நெடுமூச்சுவிட் டுடல்சேர்ந்தன
இன்றுகுநின் னடிவந்தநா ளெதிராசனே யெதிராசனே. (34)

மண்ணுற்றவான் றழையாவிகண் மகன்றந்தைமா துலனாயினேன்
கண்ணுற்றகா தலனுதியாக் கழறும்பிறப் பினிலோய்ந்தனன்
எண்ணற்றதாய் பெற்றேங்கின ளினிதீனுவா ளெவளும்மிலேன்
எண்ணற்கவென் பிழையாரிய வெதிராசனே யெதிராசனே.
[(35)

நானேநினை நினைவிட்டிலே னாராயண னடியார்களா
நீநோவுசெய் யுபகாரமே நினையாதவன் பதையாதவன்
ஆனாலுநின் னடியாரெனை யடைபையலே யென்றார்கள்காண்
ஏனேநின தாளெற்கிலை யெதிராசனே யெதிராசனே. (36)

செய்ந்நன்றிகொன் றுளனாயினேன் றிருமாலடி யரைநோக்கிடின்
கைந்நின்றுகூம் பிக்கால்விழாக் கடையீனனாய்க் கழுதைப்பிறப்
பைந்நின்றநன் றென்னேயுளே னருளாழியா ரியநாதனே
எந்நின்றசீர் நிறைவேதனே யெதிராசனே யெதிராசனே. (37)

வடவேங்கடத் தவன்றெண்டனு வான்கானிலே யமுதங்கொடுன்
னிடம்வந்தனத் துடன்பாத்தளித் தினிதேகிடச் சென்மாதவ
கடனஞ்சினுங் கடையேனெனைக் கைவிட்டிடிற் கதிவிட்டனன்
எடலென்பிழை யருள்செய்குவா யெதிராசனே யெதிராசனே.
[(38)

ஈரொன்பது நாள்வாதுசெய் யிகலெக்கிய நிகல்பட்டரோ
நீரென்பதே நிசமாகுமந் நிமலற்குமிச் சீவற்குமே
சீரொன்றிரண் டெனுமின்மினிற் றிகழ்வாக்கியஞ் சிதைவாதலில்
ஏரொன்றினை யார்தேர்குவ ரெதிராசனே யெதிராசனே. (39)

நீயோபரன் பாயாகியே நிலைகாலமு நிற்கின்றனை
நாயேங்களவ் வேதச்சிர நல்வாக்கியப் பொருடேர்துமோ
ஆயாதுவே தாந்தப்பொரு ளகம்வந்தவா றலறிச்சொனுர்
ஏயாதவ கிரிவாசனே யெதிராசனே யெதிராசனே. (40)

ஒன்றேயுல கென்றுரதி னுட்டோன்றுறு பொருடேர்கிலார்
ஒன்றேயுல காதற்குள வேதென்னெனி லதுவுஞ்சொல்வார்
அன்றுதியா மரவாகிய வையாவெழுந் தருளாயெனில்
[(41)
இன்றேனுநன் னெறிதேர்கிலே மெதிராசனே யெதிராசனே.

பரமேபெருஞ் சதமாயிடின் பதமேதெதிற் பதிவாரெவர்
சிரமாகிய சுருதிப்பொரு டெரிவாரெவர் தெரியாரெவர்
வரமாகுபத் திகளேதுநீ வனைபாடிய மலையாவிடின்
இரவேதுநற் பகலேதுகா ணெதிராசனே யெதிராசனே. (42)

நீயேயவ தரியாவிடி னிகிலத்துளே நிறைசீவர்கள்
ஓயாதுதந் தமையேபர மென்றெண்ணியோ வாமாலராய்
ஆயாவிர ணியராகியே ழாகக்கணி நிரயத்திலே
ஈயாவிழுந் தெரியாகுவா ரெதிராசனே யெதிராசனே. (43)

ஈசோகமென் பவர்யாருமி ராமாநுசற் கினிதாகியே
தாசோகமென் பவராக்கிமுத் தாபத்தினைத் தணிவித்தனை
ஆசாறிடு மைந்தாம்பொரு ளறிவித்திடுந் திருமந்திரம்
ஏசாறிடா தீந்தாய்கொலே மெதிராசனே யெதிராசனே. (44)

அட்டாக்கரப் பொருணீசொலா யானுலெமைப் பரனைத்துணைக்
கட்டானதைப் பகையானதைக் கதியானதைத் தெளிவேங்கொலோ
சிட்டாதிபா சித்தாதிபா செறிபன்மத விருளாதவா
இட்டாவெனை விட்டாலிலே னெதிராசனே யெதிராசனே. (45)

உன்னன்பர்கள் வைராகமு முறுபத்திஞா நக்கோவையும்
பொன்னன்பர்பால் மனமுள்ளவர் புரிநீதியும் பொல்லாக்கொடு
மன்னனவன் வழிபோகலு மகியார்தெளி வுறவெண்கலே
என்னேயசைத் தனேயோதுமி னெதிராசனே யெதிராசனே.
[(46)

உறங்காவிலிப் பரிசத்திஞ லுடல்பூக்குநல் லொளியோங்கலே
கறங்காமனப் பொன்னச்சியார் கனிவெண்ணியே களிகன்னலே
பிறங்காதவெம் பார்க்கின்னிரு ளேகாந்தமின் றெனப்பேணிவாழ்
விறங்காதுகாத் தருணதனே யெதிராசனே யெதிராசனே.
[(47)

அளவற்றசங் கரவாதிய ரளவற்றமா யாவாதியர்
அளவற்றகா பிலவாதிய ரளவற்றகௌ மாராதியர்
அளவற்றவஞ் ஞாநங்கெடுத் தரவிந்தநின் னடிமேவினர் [(48)
இளவர்க்குளே னேதும்மிலே னெதிராசனே யெதிராசனே.

முன்னுரியர் பததாமரை முடிகொண்டயான் முடிபெற்றபின்
என்பாதசம் பந்தம்முளோ ரவர்பாதமே யினர்பின்னரும்
மன்னுகுபே ரின்பீசுக மலிவீடுறற் கென்மாசுள
என்றேதுநங் கருணகர வெதிராசனே யெதிராசனே. (49)

வடுகாவெனு நின்ருசனுர் வழிபட்டுவாழ்த் துறுதேவனே
படுகாடெனுங் காளத்திசேர் பத்தர்க்குநல் லமுதேயிலேத் [தாளனே
தொடுவேன்கொலோ வென்றேங்கினுர் தூங்கோங்குதா மரைத்
எடுவேம்பிறப் பினில்விட்டிடே லெதிராசனே யெதிராசனே.
[(50)

தன்னுரியன் வெள்ளாட்டியாச் சமைந்தானுணுந் தற்போதமே
தென்னன்கிழிச் சென்ருன்மக டெளிவாகுபா வைக்கானவா
பன்னுளுமத் திருநாரணப் பதிமேவியாண் டருடந்தவா
என்னுதனே யென்தேவனே யெதிராசனே யெதிராசனே.(51)

அந்தோபல வாஞ்சீவரு மம்மானடிக் கேயன்றியில்
சிந்தாகுலத் தோடேபல தெய்வங்களைத் தொழுதோய்ந்தனர்
முந்தாகிய முறைமைப்படி முன்றெண்டரா கிடவைத்தனே
எந்தாயெனே யேனீக்குதி யெதிராசனே யெதிராசனே. (52)

ததிதொண்டையூர் கொண்டிக்குவிண் டாரும்மெனத் தன்கையி
[னல்
பதிகொண்டதோர் முறிபோக்கினே பரனுகுவேங் கடநாதனும்

விதிகொண்டனன் வீடந்தனன் விழைமங்கையும் வீடுற்றனள்
எதிநாதனே கதிநீயெனக் கெதிராசனே யெதிராசனே. (53)

மண்மாமலர் மகிழீசனு மகிழாதுனேத் தருமீசனும்
தண்மாமுநி போகங்கொளுந் தனியீசனுந் தடையின்றியே
விண்மாநிலச் செல்வங்கணின் விதிநிற்பவா வெளியிட்டனர் [(54)
எண்மாபத கன்னென்னேயா ளெதிராசனே யெதிராசனே.

குருமூர்த்தியா வருமூர்த்தியெங் குடியாவுநின் னடியேயுள
ஒருமூர்த்தியா வுறுஞானமு மோர்ரார்த்தியா யுறுபத்தியும்
தருமூர்த்தியாம் வைராகமுஞ் சாராததோர் சடன்மேதைகூழ்
எருமூர்த்தியா விட்டாள்குவா யெதிராசனே யெதிராசனே.(55)

போகத்திலே பொலிதீயன்யான் பொதிவேதவே தாந்தத்துறும்
யோகத்திலே கண்டுற்றதோ ரொளிமாசுகப் பொருளுற்றநின்
பாகத்திலே படியாதயான் பரமாகுமப் பொருணச்சலெற்
கேகத்திலே நாணுக்குதே யெதிராசனே யெதிராசனே. (56)

கழிஞானமாஞ் சடகோபனுர் கலியுங்கெடுங் காண்மின்னெனுப்
பழிஞானமில் பதிகத்தினுற் பரிவாகநின் படிபாடினர்
வழிபாடுசெய் துய்வாகநின் வடிவாக்கியாள் விழியாக்கியே
இழிவாக்கிடா தெமையாட்கொளா யெதிராசனே யெதிராச
[னே. (57)

ஒருமூலமந் திரவாச்சிய னேவாவவா வதிகாரங்கண்
யுருமூலமந் திரமீந்தநீ யெற்கோவருள் செய்வாயெனப்
பெருமாசையா லென்மாசினுற் பெட்புற்றுபே துற்றேய்ந்தனன்
இருமாசைமுற் றுறநோக்கியா ளெதிராசனே யெதிராசனே.
[(58)

சருவஞ்ஞனு லாகாதவிச் சகமுற்றுநின் ருளேத்திட
ஒருவஞ்சமு மில்லாமலே யொளிவேதமந் திரமோதினே
கருமஞ்செயாப் பிரபத்தியே கழியாச்சுக நெறியென்றனே
இருமஞ்சிலா வெற்கஞ்சலீ யெதிராசனே யெதிராசனே. (59)

முதுசாமமா மறையுச்சியின் மொழியின்படிப் பரசீவர்கள்
பொதுவாகுமா நந்தத்திலெப் போதுந்தகா தொருபேதமென்
பதுவாகுமவ் வசியின்பதம் பரிந்தன்னதே பண்பென்றனே
இதுயாவருந் தெளிவுற்றன ரெதிராசனே யெதிராசனே. (60)

தத்தொம்பதப் பொருளாய்கிலார் தானேபர மென்ருய்கிலா
வித்தைக்குளாய்ப் பிறரேளன வேதைக்குளாய் வெள்குற்றனர்

தத்தென்னிறற் பரமென்றனை தொம்மென்னிரு சனையென்றனை
இத்தன்மையா ரிசைசெய்குவ ரெதிராசனே யெதிராசனே.(61)

நீயேகுரு பரனென்றவர் நினைதாளினைப் பணியாதவன்
நாயேனை நா ரணன்றொண்டெனி னானவனோ வென்றேங்குவன்
தாயேயரு டந்தாயொரு தானானவென் றநமானவா
ஏயேயென விகழாதரு ளெதிராசனே யெதிராசனே. (62)

மன்னாகுதி நினைநன்றென மதியென்றவா சகமெண்ணியே
தன்னாகுமுண் மையைநாடியச் சாமிக்குநாஞ் சொத்தாகுதும்
என்னாநினைந் தின்பெய்திடா திறையானென விழிவெய்தினர்
இன்னாவிலா துன்பாதமீ யெதிராசனே யெதிராசனே. (63)

மாயாமத வலைசிக்கியே மாய்ந்தார்பலர் மதிசூடியை
நீயோதுதற் பரமென்றெணி நீறாய்நிலத் தவிந்தார்சிலர்
ஈயாதிழி பலதேவரை யிறையோனெனா விறந்தார்சிலர்
ஏயாதவாத் திரிவாசவா வெதிராசனே யெதிராசனே. (64)

எம்மான்றரி சநமோங்கவே யென்னென்னவோ வினல்மேயினை
அம்மானுநின் னாட்சிக்குளே யானாதுவைத் தனனாதலால்
சும்மாவிருந் திடினாயினேன் சுகிக்கற்கொரு சூட்சிக்கிலேன் [(65)
இம்மானிட னினையேத்தல்செய் யெதிராசனே யெதிராசனே.

அத்தாநினக் கடியோமென வடியோமடிக் குடிலுய்ந்தன
பித்தானவன் பிழைசெய்தவன் பெரியோரைநிந் தனையிட்டவன்
மொத்தாடுமைம் புலவாசையே மூவாதபே றாக்கொண்டவன்
எத்தாலுமீ டேறற்கிலே னெதிராசனே யெதிராசனே. (66)

ஒருநாளுநின் பேர்வேண்டிலே னொருநாளுநின் னூர்போற்றிலேன்
ஒருநாளுநின் னுருவெண்ணிலே னொருநாளுநின் குணம்பன்னி
ஒருநாளுநின் விசயஞ்சொலி யுற்றாருட னுடல்பூத்திலேன் [லேன்
இருநாளுநின் னொருபத்தியீ யெதிராசனே யெதிராசனே.(67)

அருளாளனார் தந்தாளும்பே ரருளாளனார் தந்தேசிகா
இருளாகுமுத் தடைமேவினே னிதினாலென தியானாயினேன்
ஒருநாளுமீ தொழிவாகிலே னுன்காருணி யத்தாலென [(68)
திருணீங்கிட வருள்செய்குவா யெதிராசனே யெதிராசனே.

மெய்வந்திலா நாவானினை மெய்போலவே துதிசெய்தனன்
கைவந்திலாக் கயவன்னெனைக் கடுத்தேவிடிற் றடுப்பாரிலை

ஐவந்தநின் னடியார்கள்கண் ணெச்சிற்கழு விடவென்றனை [(69)
எய்யாதுவைத் தருள்செய்குவா யெதிராசனே யெதிராசனே.

நின்பாதமெண் ணிமலர்க்குளே நெடுநீசன்யா னிற்கின்றது
புன்பாலதாம் பைங்கூழ்க்குளேர் புல்லாடவன் போலாகுவேன்
அன்பாலெனை யவரேளன மாடிக்களித் திடவாக்குவாய் [(70)
என்பாவவாக் காற்போற்றினே னெதிராசனே யெதிராசனே.

அருளென்பதோ ரணுவும்மிலே னடியார்முனந் தடிபோலவே
மருளென்பது மாய்ப்பானெணி மகிழ்ோடுசே வித்தும்மிலேன்
தெருளேதுமற் றவனுகிடம் பத்துக்குளே தெளிவெய்தினன்
இருளேதுமற் றவனுக்கியா ளெதிராசனேயெதி ராசனே. (71)

நின்னுமமாந் துவயத்தையே நீரன்னமா நிலைகொள்ளுநா
ளெந்நாளெனு வேங்குங்குணத் தெம்மான்களென் றனையும்மொருச்
சின்னுனெனச் சிறுபுன்னகை செய்வாரெனி லுய்வேனையா
எந்நாளுநீ யேகாப்புகா ணெதிராசனே யெதிராசனே. (72)

நான்வேண்டியா நீயாள்குவாய் நாய்வேண்டியா மழைபெய்வது
தான்வேண்டிவந் தவனீதலத் தவராணவந் தமைநீக்கியே
வான்வேண்டியீந் தவனீயெனை வாங்காதெனு தகல்வாய்கொலோ
ஏன்வேண்டலென் னன்னுய்மிகை யெதிராசனே யெதி
[ராசனே. (73)

சிதசித்தெனுந் திருமேனியுட் டிகழும்பிரான் றிருநாதனென்
றிதமுற்றவே தாந்தம்மெலா மிசைவிப்பதை யறிவிப்பதாய்
பதமுற்றபாந் தட்காதியாம் பரநீயெழுந் தருளாயெனில் [(74)
எதுமுற்றவோர்ந் துலகுய்யுமா லெதிராசனே யெதிராசனே.

ஐந்தாகுபே தத்தாவிக ளைந்தாகுமெம் மான்மேனிகள்
ஐந்தாறதா மவனைப்பெற வவையுட்கடை யாறேநலம்
நந்தாதிர்கோள் பவசாகர நமரங்காளென் றருள்செய்தனை [(75)
எந்தாய்பிறந் துய்ந்தோமிலை யெதிராசனே யெதிராசனே.

அனையாற்றகி லாப்பாவமே யடியேன்புரிந் துளனுதலில்
உனையொப்புளா ரெவரென்பவ மொழிக்குந்திற முடையாரையா
புனைமாதவ னிந்நாளெனைப் புரந்தேயருள் புரிவானெணி
எனையுன்னிடம் விட்டானரு ளெதிராசனே யெதிராசனே.(76)

அடியேனடி யேனென்றசொ லறிவேனதன் படியேயிலேன்
செடியேயுள ஞெருநாளுமச் செய்கைக்கிணங் கிலன்றீயன்யான்
படியாக்கிடந் துன்ஞணைநான் பார்ப்பேன்கொலோ வென்பே
[னலால்
எடுதீயனென் வடிவாக்கியா ளெதிராசனே யெதிராசனே.(77)

சுகசாரணர் போலேவயி ணவவேடஞ கினனேயலால்
அகமாரகத் தோடேநலோ ரகம்வேம்வினை யுடையேனையா
மகஞகிடி லென்செய்குவார் மாதாபிதா மகன்றீயனேல்
இகம்யாவும்வா னகம்யாவுமீ யெதிராசனே யெதிராசனே.(78)

உயிர்பாரதந் திரசேடமே யுருவென்றமந் திரமோவறிந்
தயர்வெய்திடா தறிந்தேயுள னநுட்டானமோ வறியேனையா
பயமற்றவன் பவமற்றவன் பரிவற்றவன் பரனேயிதென்
இயலுற்றிட வருடந்தரு ளெதிராசனே யெதிராசனே (79)

என்ஞலடி யார்க்கேற்றநன் னடைமேவிட வியலாதுகாண்
உன்ஞல்வரு வித்தாள்கரு ணைக்கொப்பிலா வொருமாதவா
பன்ஞளுமுன் பதம்விட்டிலார் பார்த்தார்குளிர் நோக்காலெனை
இன்ஞதுள முதலூதிய மெதிராசனே யெதிராசனே. (80)

தக்கானல னேயாயினுந் தண்வெண்மணி லுன்போலவே
பொக்காக்குள மிட்டுண்மடிப் பொறிமாவுடன் பெருமானையான்
எக்காலுமி லக்காகவே விடும்பாக்கிய முடையேனையா
இக்காலெனை நீங்காதரு ளெதிராசனே யெதிராசனே. (81)

இடும்பாக்கிய முடையேனெனு மிழிஞன்சொலை யெண்ணேலெணி
விடும்பாக்கிய ஞக்காதுயிர் விமலக்குணம் மிளிர்வானருள்
தொடும்பாக்கிய ஞக்கிப்பெருந் தொண்டர்க்கடி யாஞக்கியே
எடும்பாக்கிய ஞதற்கரு ளெதிராசனே யெதிராசனே. (82)

நமவென்றசொற் சொலவுந்தகா நரஞயினு மதனுட்பொதி
தமதென்றதுந் தாமென்றதுந் தகுமாவெனத் தடிந்தாவது
உமதன்பின ஞுறுமென்றவுத் தமராய்மொழி யுலவாதுளேன்
எமன்வெள்கிட வெனையாக்கியா ளெதிராசனே யெதிராசனே.
[(83)

நானுங்கரை மரஞ்சேறலுன் னளினப்பத நாவாயினைத்
தானுஞ்சொல லாற்ருன்மகிழ்ந் துளன்காண்டமி யேனையனே

வானும்புவி தானும்மறை யோனும்வழுத் திடுமாப்புக
வீனுங்குண கணனேயரு ளெதிராசனே யெதிராசனே. (84)

எழுபத்துநான் கெனும்தூம்பிஞ லியன்மந்திர வமுதானதைத்
தொழுபத்துறுந் தொண்டர்க்குவீ டாக்கிக்களி துகளற்றவா
வழுவத்தனே யேனும்மிலா வாரித்தட வருண்மாரியே
இழிவெத்தனே யுளனுண்டரு ளெதிராசனே யெதிராசனே.
[(85)

ஆழ்வார்கள்செந் தமிழ்வேதநூ லருளும்பொரு ளறிவித்திவர்
ஊழ்வாங்கிட வரங்கத்தமா னுன்சீடனு வுறவெண்ணியாம்
வாழ்ந்தோங்குற வரயோகியாய் வந்தேதமிழ் மறையின்பொருள்
ஈந்தாண்டரு டந்தாய்கொலெ மெதிராசனே யெதிராசனே.
[(86)

இதமாம்வட கலேவேதநூ லிலகும்பொரு ளெல்லாமுநின்
பதமாகிட வுன்பாடிய நூலாதியிற் பகர்ந்தாய்பினர்ச்
சிதமாகிடா வெம்போலிகட் கினிதாம்வர முநியோகியாய்
இதமாகுதென் கலேயீந்தரு ளெதிராசனே யெதிராசனே. (87)

உயர்மாக்குலத் தவர்க்காரண முரைசூத்திரப் பொருள்யாவையும்
அயல்மாழ்குற மாபாடிய மதனுலருள் செய்தாய்கொடும்
மயல்மாய்ந்துள வாழ்வார்மறைப் பிரசாதமே மகிழ்ந்துண்ணுவான்
இயலீடுக ளீவானரு ளெதிராசனே யெதிராசனே. (88)

எம்போலிய ரீடேறவென் றியலுங்கரு ணேயினுன்மணத்
தம்போருகத் தாயாரடிக் கடியார்மறைப் பொருளேச்சொலச்
செம்பாகுவே செங்கன்னலே செங்கண்டுதே னேபாலதே
எம்மாமுநியெனேயாண்டரு ளெதிராசனே யெதிராசனே.(89)

உலகாரிய னருணூற்பொரு ளோதாரெனின் முன்னூற்றமி
ழிலகாரணங் கடலிற்கரை யின்கன்னல தாகும்மெனு
அலவாவதன் பொருட்டெங்குல வடிகாளென வடியோந்தொழ
எலமாகவந் தருள்செய்தனே யெதிராசனே யெதிராசனே. (90)

சமக்காரமாத் திரமீந்துமுன் றமிழாரணப் பொருள்யாவையும்
எமக்கேனரு ளீந்தாயிலே யென்றுன்கொலவ் வீசன்மிகத்
தமக்காகவோர் தனியன்செய வவற்கோதினே தமிழின்பொருள்
எமக்கானவெங் குலதெய்வமே யெதிராசனே யெதிராசனே.
[(91)

தென்னுரணங் கொண்டாடிடு சீர்பெற்றதன் ருேதிவ்வியம்
என்போதமா தவமற்றவை யின்பாகநன் ருக்கிக்களி
அன்பேயெம தருளேயுனு மமுதேமறைக் கதிராசனும்
இன்பேயெமை யெற்ருதரு ளெதிராசனே யெதிராசனே. (92)

திருமாமலைக் கேகுந்தடங் காட்டேற்றமா ரவனைக்களி
பெருமாவுப காரன்னெனுப் பேணிப்பெருங் களிதூங்கினே
வருமாவுறங் காவில்லிகைப் பரிசத்துமா மகிழ்வெய்தினே
இருமாவுற வருளேயனே யெதிராசனே யெதிராசனே. (93)

உனையுங்கொல நஞ்சிட்டவிவ் வுலகென்றிடி னிதன்கண்ணினே
புனைஞாநவை ராகத்தினிற் பொலிவாரெவ ரருளேயனே
நினைநிற்கப ராதம்புரி நிருபன்புமு நெளியாயினுன்
எனையோரிக முறமாண்டன ரெதிராசனே யெதிராசனே. (94)

இம்மாதரி சநத்திற்குயிர் கண்ணீந்திடு பெரியாரருள்
தம்மாமதத் தருமம்மெணித் தாசன்செயாச் சடன்யானையா
அம்மாவிவ னென்னுதுத னருண்மேவினர் சரணத்துகள்
எம்மாவினை யிறுவானரு ளெதிராசனே யெதிராசனே. (95)

முதன் மூன்றுநல் லாழ்வார்கள்செய் முன்னூல்படித் தறியேனினம்
இதன்மீதவ ரருளுங்கலை யெனவோவது தெளியேனினம்
மதன்விண்டிடு கலவிக்குமா மறவெவ்வினை மாலைக்குமே
இதமாகிடு கடையேனையா ளெதிராசனே யெதிராசனே. (96)

நாலாயிர மென்பாரத னுலாகிட லெனவோசொலேன்
மேலார்வழி கேட்டன்னவை விள்வான்வழி மேவேனலேன்
ஆலாலமன் னுர்கேண்மையி லன்பாயினே னுண்டாண்டெலாம்
ஏலாதழிந் தொழிந்தேனரு ளெதிராசனே யெதிராசனே. (97)

பலதேரினும் பத்தர்க்குகப் பாகும்பணி யொன்றும்மிலேன்
நலமாகிடு மென்றேனெரு நாளுஞ்செயே னுறையினேன்
அலதேலொரு வகையேனுநல் லவனுகிட வெண்ணற்கிலேன்
இலையென்செய வல்லேனையா வெதிராசனே யெதிராசனே.
[(98)

உன்ருண்மல ருறுகேசர னெனையாட்கொளா யெனில்யானையா
நின்ருகிட வலனென்பது நீயுஞ்சொல லாகாயையா
கன்ருகவென் கறையுண்டுநின் காற்ருமறைத் தேன்வாக்கியே
இன்ருகிட வேனும்மரு ளெதிராசனே யெதிராசனே. (99)

சீருற்றௌளி ரிராமாநுச செயஞாநவா ரியனர்சரண்
தாருற்றௌிர் பரன்கையினிற் றருதாதவென் றெனையாண்டருள்
நீருற்றௌிர் திருக்கோவலூர் நிலவெம்பெரு மானரவர் [(100)
ஏருற்றௌிர்ந் திடவோதின ரெதிராசனே யெதிராசனே.

வாழி.

இனிதாகுநின் பததாமரை யிணையூரிடை யுடைவாழியே
தனிதான்றகு முக்கோல்தடங் கையஞ்சலி கைவாழியே
பனிதான்பர மன்வாழ்விழி யகடாநந முடிவாழியே
எனையோதியென் றிடுமாபர னினியாரொடென் றும்வாழியே. (101)

வேறு.

பின்முனுமுத்தர் நித்தர்கள்வாழியே
பேணுநூற்றெட்டெம் மான்றுயர்வாழியே
தன்முன்றுனெனு மாதியிலாத்தமி
ழாரணங்கடலைப்புடன் வாழியே
என்முன்னின்ற விறைவெண்மண்வாழியே
இலகுமஞ்சட் பொடி மணி வாழியே
பொன்முன்றந்த மநுமூன்றைந்தேதிவி
பூதிரண்டும் பொலிவுற வாழியே. (102)

ஸ்ரீ:

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

இராமாநுஜமாலை.

இஃது
சென்னைமாநகரம்
சீவில் இஞ்சிநீரிங்காலீஜ்
தமிழ்த்தலைமைப்புலமை
பு. செ. இராஜகோபால முதலியாரவர்களால்
இயற்றிவித்துத்

திருப்பாத்திருப்புலியூர்
ஜெகநாத முதலியாரவர்களால்

த்ரிபாஷாந்த்ரவச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

அக்ஷய ஹு ஐப்பசி மீ.

ஸ்ரீ:

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

இராமாநுஜமாலை.

தனியன்.

துதி.

இராமாநுஜ னடியை யென்றென்றும் போற்றும்
இராமாநுஜன் றன்னை யேத்த—வராதார
நற்சீனி வாசனையே நாடிச்சம் பாடிகுரு
நற்சீனி வாசனையே நத்து.

காப்பு.

இன்பம் பழுதெனவே யெண்ணிறந்தோ ரிப்புவியி
லன்போடு செப்பு மறநெறியைத்—துன்னு
மிராமா நுஜன்மே லியம்புபா மாலைக்
கராமா னளிபடைகள் காப்பு.

நூல்.

பூவிற் றிகழ்மாது புட்கரமாய்ச் சேர்மாலைப்
பாவிற் புகழோங்கப் பாடினு—னாவிற்கு
நற்சுவையு நற்கதியு நல்குமிரா மாநுஜன்செம்
பொற்பதத்தை நெஞ்சே புகல். (1)

நள்ளிருளி னெஞ்சே நண்ணவிடா வென்குருவைக்
கொள்ளாரி னின்று குறையறவே—கொள்ளுகின்ற
அன்பனிரா மாநுஜனல் லம்புயமாம் பாதங்க
ளன்றித் துதியா தறி. (2)

நெஞ்சே யடிபணிந்தே னின்னையென்றும் பேய்ப்பிறவி
யஞ்சப் புலர்த்தி யருளவே—விஞ்சுபுக
ழாரிய னிராமா நுஜமுனிக் கன்புசெயுஞ்
சீரியர்காற் கீழிற் செறி. (3)

என்னைப் பொருளா யிருளா னதுசுரந்த
முன்னைவினை வேரறுக்கு முன்னவனைப்—பன்னப்
பணித்த விராமா நுஜன்பரன் பாதங்
கணித்துத் துதிமனமே காண். (4)

எனக்குற்ற செல்வ மிராமா நுஜனென்
மனத்துற்றுப் போற்றுதற்கு மாயா—தெனக்குற்ற
அன்பனவ னுமத்தை யாதரவாய் நன்னெஞ்சே
துன்பணுகா வென்றே துணி. (5)

இயலும் பொருளு மிசைவாகச் சேர்த்து
மயல்கொண்டு வாழ்த்தி மதித்துப்—பயிலுங்
கவியிரா மாநுஜன்மேற் காதலித்து நெஞ்சே
புவிமாயம் விட்டுப் புகல். (6)

மொழியும் புகழுடையான் முக்குறும்பாம் வஞ்சக்
குழியைக் கடக்குநங் கூரன்—வழிகூடுஞ்
சீரிரா மாநுஜனெண் செங்கமல மல்லாமற்
சேரிரா நெஞ்சே திறம். (7)

வருத்துகின்ற மாவிருளை மாற்றுசீர் வேதக்
குருத்தையுஞ் செந்தமிழுங் கூட்டி—யருத்தத்
திரித்தன் றெரித்தத் திருவிளக்கை நம்மி
லிருத்துமிரா மாநுஜனை யேத்து. (8)

இறையவனைக் காண விதயத்தி னுள்ளே
நிறைதீப மேற்றற்கு நெஞ்சத்—துறையவைத்
தாளுமிரா மாநுஜனு மாரியனை வாழ்த்திமெத்த
நாளுந் துதியவனை நன்று. (9)

மன்னிய பேரிருளை மாற்றினபின் மாமலரா
டன்னேடு காட்டுந் தமிழ்த்தலைவன்—பொன்னடியைப்
போற்றுமிரா மாநுஜன்ருட் பூண்டவர்க டம்பெருமை
யேற்றற்கு நெஞ்சே யிசை. (10)

சீரிய நான்மறையைச் செந்தமிழா லாதரித்தப்
பாரியலும் பாண்பெருமாள் பாதமலர்த்—தாரியலைச்
சூடுமிரா மாநுஜனைச் சூழ்ந்தவர்தங் காரியங்க
ளுடுதற் கேலா நமக்கு. (11)

சீர்த்தித் திருமழிசைச் சேர்கோனின் றுளகத்தி
லார்த்திகெட வாழ்த்துகின்ற வான்றவன்றன்—சீர்ப்பாதம்
போற்றுமிரா மாநுஜன்செம் பொன்னடியை யெந்நாளு
மேற்றுவாய் நெஞ்சே யினி. (12)

பசுந்துளவத் தேன்மாலைப் பைந்தமிழிற் பெய்யும்
பசுமறையின் பாமாலைப் பாதத்—திசையுறவே
சாத்துமிரா மாநுஜன் றண்கமலச் சேவடியை
யேத்துபவர் தம்பதமே யெண்ணு. (13)

கதியி னிலைக்கவெங் கானங்கள் யாவுங்
கொதிக்கத் தவஞ்செய்வர் கூடிப்—பதிக்குத்
தருமிரா மாநுஜனற் றுட்கமல மேத்தும்
பெருமிதமாத் தாசர்கடாள் பேணு. (14)

காதற் பெருஞ்சுழியிற் காதலித்துப் பேணுத
தாதரடி சேரத் தருசிந்தை—யாதரவா
யோதுமிரா மாநுஜன்சீ ரோங்கு நறைகமலப்
போதுதொழு நெஞ்சே புரிந்து. (15)

தலமனைத்து மோங்குகலி தாவுகின்ற நாளிற்
பலங்கொடு காக்கும் பதுமன்—மலர்சூடு
மாதி னருளை மதியிரா மாநுஜனு
மாதவனை நெஞ்சே வழுத்து. (16)

முனியார் துயரங்கண் முந்தியு மின்பங்
கனியா ரவர்மன மாதே—தனியானைத்
தண்ணிரா மாநுஜனைச் சார்ந்தவர்தஞ் செங்கமல
நண்ணுதற்கு நன்னெஞ்சே நாடு. (17)

அரிய திருமறையை யன்புடனே யீந்த
பெரிய குருகூரன் பேணி—யுரிமையொடு
பாதமேற் சாத்திப் பரப்பிரம மாலடியை
யோதுமிரா மாநுஜனை யோர்ந்து. (18)

தென்குருகை நாதன் றிருவாய் மலர்ந்தருளுந்
தென்றமிழை யாதரித்துச் சேவைசெயப் —பன்னரியத்
துன்பமது வந்தணுகாத் துய்யவிரா மாநுஜன்றண்
ணின்புதரு பாத மிறைஞ்சு. (19)

பெருஞ்செல்வந் தந்தையொடு பேணுநற் றாயு
மருகுருவு மாகிவரு மாறன்—றருமறையை
நீணிலத்தோர் தங்கட்கு நேருமிரா மாநுஜன்றன்
வாணிலத்து மாயுமே வண்டு. (20)

யதிகளுக்கு நாதன் யமுனைத் துறைவன்
கதிதன்னைக் கற்பிக்குங் கர்த்த—னதியுசித
பாதனிரா மாநுஜனைப் பன்னு மறையவர்தம்
பாதங்க ணெஞ்சே பணி. (21)

கார்த்திகை வீரனொடு கக்குகனன் முக்கண்ணு
மூர்த்தியு மோட முதுகிட்டுத்—தார்க்கியன்மேற்
பாவும் பரனைப் பணியிரா மாநுஜனைத்
தாவுமே யென்மனதிற் றான். (22)

வைப்பாய வான்பொருளை வைத்து மனத்தகத்தே
யெப்போது மேத்துகின்ற வென்குருவை—யொப்பா
ரிருநிலத்தி லில்லா விராமா நுஜன்றன்
பெருநெறியை நெஞ்சே பெறு. (23)

தீவினையாற் பற்பலவாந் தேகங்க ளெய்தினதா
னேவினையிற் பட்டுமிக நொந்திருக்கும்—'வீவினையை
நீக்குமிரா மாநுஜன்றா னீணிலத்திற் றேற்றினபின்
போக்குவித்தான் பொய்ச்சமயப் பூட்டு. (24)

கருணையிரா மாநுஜவிக் காண்டஞ்சூழ் பூவிற்
றருநின் னருளினது தன்மை—யொருவருமே
நோக்கொணு வல்லமையை நூல்வல்லோர் செப்புதற்கு
நாக்குகடா மேலுமோ நன்கு. (25)

திக்குற்ற கீர்த்தியிரா மாநுஜனைச் செய்வினையா
மெய்க்குற்ற நீக்கநினை மேவுநல்லோ—ரெக்குற்ற
வாளராய்த் தோன்றி வருபிறப்பை மாய்ப்பதற்
காளரா யெண்ணுவரே யாய்ந்து. (26)

இரங்கியிரா மாநுஜன்றா னென்றனது நெஞ்சந்
திரங்கொண்டு பாவந் திகைக்க—வரங்கொண்டு
சேதிக்க வந்தெழுந்த செம்மலடி யல்லாது
வாதிக்க வாகா மதித்து. (27)

நெஞ்சிற் கறைகொண்ட நீசன் றனைக்காய்ந்து
தஞ்சமெனப் போற்றிநிதஞ் சார்ந்தவர்கட்—கஞ்சலென
நங்கள் பெருமா ணவிலுமிரா மாநுஜன்றன்
கங்கில்புக ழாளனெனக் காண். (28)

கூட்டும் விதியென்று கூடுமோ தென்குருகைப்
பாட்டென்னும் வேதப் பசுந்தமிழ்தா—னூட்டமுடன்
வீட்டின்கண் வைக்குமிரா மாநுஜன்சொன் மெய்யுணர்ந்தோ
ரீட்டங்க ளெய்திடுவ ரின்பு. (29)

இன்பந் தருமோக்க மெய்திடுவை யெண்ணிறந்த
துன்பந் தருநிரயத் தொல்லுலகின்—மன்பல்
லுயிர்கட் கிறையிரா மாநுஜனென் றேத
வுயிர்த்துணையா நெஞ்சே யுணர். (30)

ஆண்டுகணு டிங்களிலே யாய்நிகழுங் காலமதி
லீண்டுபல யோனியுழ லின்றிமனங்—காண்டகுதோ
ளண்ணலடி சேருமிரா மாநுஜனை யண்டினவர்க்
கெண்ணரிய பேரின்ப மேத்து. (31)

பொருந்தும் பொறையும் புகழுநற் றேசுந்
திருந்திய செல்வமுஞ் சேர—வருந்தவன்றன்
வண்மையினு லீய வருமிரா மாநுஜன்றன்
றிண்ணநமக் கென்றே தெளி. (32)

அலர்மகளின் கேள்வன்றன் னாழிபடர் தண்டு
மிலகொளிசேர் சங்குடனே யேன்ற—பலபடையும்
பூதலக் காப்பினொடு போற்றுமிரா மாநுஜனை
யாதரவாய்ப் பன்ன வறி. (33)

இராமா நுஜனை யிரவுபக னித்த
மராவுமதி பெற்றவர்க ளன்பிற்—றராதவற்றை
விண்ணினொடு மண்ணினும் வேண்டா திருநெஞ்சே
நண்ணிடுவை யின்ப நமக்கு. (34)

அடலுறுநல் லாழிகர னருயிர்த்தே வின்சொற்
கடல்போல நற்பொருளைக் காட்டி—விடலரிய
தீநெறிக்கண் வீழ்விக்காத் திண்ணிரா மாநுஜன்றன்
பாநெறிக்கண் ணெஞ்சே பரசு. (35)

நானிலத்து மானுடத்தை நாடா ஞெருதெய்வ
மானித்துப் போற்ற மனமில்லான்—ருனித்தம்
பொன்னரங்க மென்றேபுகலிரா மாநுஜன் சொல்
லென்னரங்கங் கொள்ள விசை. (36)

படியிற் புகழ்பெற்ற பண்புடையார் கூறக்
குடிகொண்டு வாழுங் குணத்தன்—கடிகொண்ட
மாமலர்த்தாள் வைத்திரா மாநுஜனைப் போற்றுபவர்க்
காமலத்தைப் போக்குமே யாய்ந்து. (37)

புண்ணியர்க ணித்தம் புரளாது நற்றுளபக்
கண்ணியிடு மால்பதத்தைக் கண்டுதொழும்—பண்டையர்கள்
போற்றுமிரா மாநுஜநின் பூமலர்த்தாள் சென்னியில்வைத்
தேற்றமனத் துள்ள விசை. (38)

ஆர்தரமோ விந்த வயர்தரு மாவுலகிற்
சேரிருளின் வெந்துயரஞ் சேதிக்கத்—தார்மருவு
மீறிலிரா மாநுஜனை யென்றுந் துதித்தவர்க்குக்
கோறிடுவன் பாவக் குணம். (39)

அங்கையி னெல்லி யருங்கனிபோற் றேற்றுவிக்கு
நங்கைமலர் சூடுகின்ற நாதன்றன்—பொங்குபுகழ்ச்
செம்மலி ராமாநுஜனுஞ் சேமவைப்பை நித்தநித்தந்
தம்மிலிடு வார்பவம்போந் தான். (40)

பொருளொடுதன் மக்களுடன் பூங்குழலாட் பூவு
மருள்கொண் டினைநெஞ்சே மற்று—மிருள்கொண்ட
வெந்துயர நீங்குமிரா மாநுஜன்றன் மெய்ப்பதமு
வந்துதரி னென்றே மதி. (41)

வீடுடனே சொற்பொருளு மேவுநல வின்பசுகந்
தேடுந் தருமந் திகழ்கண்ணன்—ருடமக்கா
மென்றுரைத்த வள்ளலிரா மாநுஜனு மிந்நிலத்தி
லென்றுமின்ப மீகுவனென் றேத்து. (42)

மண்மிசையே யோனிகளில் வந்துபிறந் தெங்களிறை
கண்ணுற்று நிற்கினுமே காண்கில்லா—மண்ணிலத்தோர்க்
கண்ணலிரா மாநுஜன்வந் தாதரித்துப் பின்பவர்தா
ளண்ணடுமை கொண்டார் நலம். (43)

ஆயிழையார் கொங்கையெனு மாரளற்றிற் றங்குமிக
மாயுநல் லாவிக்கு வாழ்வுதர—நாயகனு
யெல்லா வுயிர்கட்கு மேலுமிரா மாநுஜனுந்
தொல்லோ னருளினது தோய்வு. (44)

சுரக்குந் திருவுடனே சொல்லு முணர்வும்
பறக்கு மிருவினையின் பற்றுந்—தரைக்கு
ளுறுகலியைப் போக்குமிரா மாநுஜனென் றோதப்
பெறுவரிவை மெய்யெனவே பேசு. (45)

நல்லார் பரவுமிரா மாநுஜன் றன் னமநம்பிக்
கல்லா ரகலிடத்துக் காமிப்பா—ரல்லாது
சொல்லார் திருமொழியைச் சோதித் தவற்குநிதம்
பல்லார்பல் லாண்டு பரிந்து. (46)

பேறொன்று மற்றில்லைப் பேசுஞ் சரணன்றி
யாறொன்று மின்றிமற் றச்சரணந்—தேறுமவர்க்
கெற்குமுனை தந்த வெழிலிரா மாநுஜனைக்
கற்குபவர்க் கில்லைபவங் காண். (47)

கூறுஞ் சமயங் குலையக் குவலயத்தே
மாறன் மறைதேர் மதியுள்ளான்—றேற
மனத்திற் புகவிரா மாநுஜனை யென்றுங்
கனத்திற் கருதிடுவாய் காண். (48)

நாடா தெனதுமன நாடா தெனதுகர
நாடா தெனதுபுய நானிலத்தி—னுடத்
தெரிக்குமிரா மாநுஜன்றன் செய்தகவி யொன்றிற்
கரிக்கும் பவங்கள் கனிந்து. (49)

இறைஞ்சப் படுபொரு ளீச னரியென்
றறத்தை மொழியுநல் லண்ணற்—றிறத்த
விருவினையைப் போக்கி யிதயத்தி னுள்ளே
வருமிரா மாநுஜனை வாழ்த்து. (50)

மாதவர்க ணித்தம் வணங்கு திருமாதின்
காதலனை நற்றோழி காமுறுவேற்—கேதமில்லாத்
தேன்றுளப மாலைதரத் தென்குருகை நாதன்மகிழ்க்
கோன்றிருரா மாநுஜற்குக் கூறு. (51)

நிகரின்றி நின்ற நினதருளை யன்றி
புகலொன்று மில்லைபுகற் புன்மை—யகலுநெறிச்
செப்புமிரா மாநுஜற்குச் சேர்ந்தடுமை யானபின்
றப்பும் பொருளென்னோ சாற்று. (52)

தலத்தின்கட் டோன்றினது தர்ம்மநெறி புன்மைப்
பலத்த மதங்கள் பறந்து—குலைந்திடவே
வந்துதித்த வெங்களிரா மாநுஜனைக் கண்டபின்
னெந்தவித மாயிற்றோ வெண்ணு. (53)

தாழா தெனதுசென்னித் தாழா தெனதுகரந்
தாழா தெனதுதோட் டாரணியிற் —றாழ
மற்றென்றும் வேண்டா மதியிரா மாநுஜன்றன்
பொற்றாளை வைத்தாளப் போற்று. (54)

இராமா நுஜன்றன் னிணையடிகள் பற்றா
தராதி மனங்க ளகன்று—பராகமா
யார்கலியிற் றேங்கி யருநரகில் வீழ்வர்கொலோ
பார்மகட்குப் பாரமெனப் பார்த்து. (55)

அடியைத் தொழுதநல் லைவர்கட் காக
முடியப் பரித்தேரை முன்ன—மடியவிட்
டாதரித்தக் கண்ணனடி யண்டுமிரா மாநுஜவெற்
காதரித்தக் கண்டிரா தாக்கு. (56)

பார்த்தா னறுசமையம் பாரிற் பதைத்துவிடப்
போர்த்தான் புகழைப் புகுந்தெமது—தீர்த்தா
னிருவினைக ளெம்மிரா மாநுஜன்றாட் செய்யும்
பெருமிதமா மற்புதத்தைப் பேசு. (57)

பற்பல் லுயிர்களுடன் பல்லுலகி யாவுமே
சொற்பரன்றா மென்றவிந்தச் சோதனையைத்—தொல்லுலகி
னூட்டுமிரா மாநுஜனை நானிலத்திற் சேர்ந்தவர்கட்
கோட்டுமே தீநெறியை யுன்னு. (58)

நாட்டுஞ் சமய நசிந்தனவே நாரணனைக்
காட்டு மறையுங் களித்தனவே—வாட்டமிலாத்
தென்மறைகள் வாழ்ந்தனவே செப்புமிரா மாநுஜன்செய்க்
கன்மடப் போக்கியல்பு கண்டு. (59)

தொண்டர் குலாவுமிரா மாநுஜனைத் தூய்யமறை
யண்டங்க மஞ்சிட் டனனுகி—மண்டலத்திற்
ருேற்றிக் கதிர்விடவே சூழ்பவன்றன் கட்பார்வைக்
காற்றுகைம் மாறென் னறி. (60)

கோக்குலத்து மன்னர்களைக் கூர்மழுவா லிவ்வுலகிற்
போக்கிய தேவனைப் போற்றுநல—மாக்கியவண்
கீர்த்தியிரா மாநுஜனைக் கேட்கமன மற்றவர்தஞ்
சீர்த்தியுரை யாதெனவே செப்பு. (61)

மற்ருெரு பேறு மதியா தரங்கனடி
யுற்றவ ரேதனக் குற்றவராய்ப்—பெற்றவனை
நற்றவர்கள் போற்றுமிரா மாநுஜனை நானிலத்தே
பெற்றபின் னல்லவோ பேழ். (62)

தேடரிய வேதச் சுடரொளியா லஞ்ஞான
மோடத் துரத்திஞு ஞேங்காரங்—கூடாரைச்
செற்றுமிரா மாநுஜன்றன் செவ்வைதரு நற்கமலம்
பற்றுபவர் நெஞ்சே பணி. (63)

கொழுந்துவிட் டோடுவெங் கோள்வினைக ளெம்மை
யழுந்திவிடா தாட்கொள்ளு மன்பன்—ருெழுதவத்தோ
னெம்மிரா மாநுஜன்ரு னின்போடு வீற்றிருந்
தெம்பொருளாய் நின்றவனை யேற்று. (64)

பெருந்தே வரைப்பரவப் பேணுநல் லெண்ணத்
திருந்தே னிருவினைக ளேகப்—பொருந்தா
நிலையுடைய புல்லரிட நின்றுபிரி நெஞ்சே
நிலையிரா மாநுஜற்கு நேர். (65)

உணருடைய ஞானிக ளுய்யுதிரு தென்சொன்
மணந்தரு மின்னிசைகண் மன்னப்—புணர்ந்தபொன்
மார்பன் பொருந்துபதி வாழ்த்தி யிறைஞ்சிநிற்கு
மார்க்கமிரா மாநுஜன்றன் வாழ்வு. (66)

பிடியைக் களிறுபோற் பின்பற்றி யானின்
னடியைத் தொடர வளிப்பாய்ப்—படியி
லறுசமயப் பூண்டதனை யாளுமவர் சிந்தைப்
பெறுமிரா மாநுஜநற் பேறு. (67)

பண்டரு மாறன் பசுந்தமிழ்கள் பாழ்மதங்கள்
விண்டிட்டு மெய்ம்மை விளங்கிடவே—யண்டத்து
வேதக் கொழுந்தேந்த மேதினியில் வீற்றிருக்கு
நாதனிரா மாநுஜனை நற்று. (68)

வாழ்வற் றதுதொல்லை வாதியர்க்கு மன்னுமறை
தாழ்வற் றதுமிக்கத் தாரணியிற்—கூழற்
றதுகுற்ற மெல்லா மறத்தைத் தருமென்
னதுவிரா மாநுஜன்றண் ணன்பு. (69)

சரண மடைந்தவர்தஞ் சத்துருவை முன்ன
மரண மடைவித்த மாயன்—முரகரியை
வாழ்த்தக் கரணங்கண் மாநிலத்தி லென்றென்றுந்
தாழ்த்துமிரா மாநுஜனைச் சாற்று. (70)

யாரு மெனக்குநிக ரின்றென்று பாண்டவர்தந்
தேரினின்று சொன்ன செழும்பொருளைப்—பாருலகிற்
செப்புமிரா மாநுஜனைச் சென்று தொழ வாவிசிந்தைத்
தப்புவிக்கு மார்நரகந் தான். (71)

சிந்தை கரணஞ் சிதைந்தனவே யென்றுமுனை
ளந்தமின்றித் தாழ வவையேற்குத்—தந்தருள
வெந்தையிரா மாநுஜனு யீங்குதித்த பேரடியைச்
சந்ததமுஞ் சிந்தைதனிற் சார். (72)

என்னியல்பைப் பார்த்துமிக வெண்ணில்லாப் பற்குணத்தா
யென்னையினி நோக்கி யெனக்குநலந்—தன்னை
யளியாத தென்னென்பா ராருலகி னல்லோர்
களியிரா மாநுஜனைக் கண்டு. (73)

சார்ந்ததென் சிந்தையுன் றாளிணைக்கீ ழன்புமிகக்
கூர்ந்ததுநின் பாதக் குணங்களுக்குத்—தீர்ந்ததென்
செய்கையிரா மாநுஜன்றாட் சேவடிக்கு முன்வினையு
முய்கையரி தன்றெனவே யுன்னு. (74)

சமயக் கலகரைச் சாய்த்துமிக வுய்ய
வமையு மறையு மளித்துத்—தமரவன்ற
னுள்ளங்க ணெய்த்தேத்த வோங்கு புகழ்தருமா
வள்ளலிரா மாநுஜனை வாழ்த்து. (75)

தேரார் மறையின் றிறமறியாத் தீயவரைக்
கூராழி கொண்டுகுறை கோபால—னேரார்
குணத்திரா மாநுஜன்ருன் கொள்ளு மெழின்மறையின்
மணத்திருந் தாரை மதி. (76)

ஈந்தனனே யின்னருளா லெண்ணின் மறைப்பொருளை
யேய்ந்தனனே கீர்த்திதனை யிப்படியிற்—காய்ந்தனனே
யென்வினைகள் வேர்பறிய வீங்கிரா மாநுஜன் றன்
னன்மைதரு பாதமே நச்சு. (77)

பொய்ப்பொருளை யென்னிற் பொருந்தாம லுன்றனது
மெய்ப்பொருளைப் போற்றி விசுவமதி—லுய்யு
மருத்துந் தருமிரா மாநுஜநின் சேவடியாற்
கருத்தினது கள்ளங் கழற்று. (78)

நல்லார் பரவுமிரா மாநுஜன் றன் ருமநம்ப
வல்லார் திறத்தை மறந்திடார்க்—கெல்லா
விடத்தினு மென்றுநித மெத்தொழும்புஞ் செய்யத்
திடத்திருக்கு நெஞ்சே தெளி. (79)

சோர்வின்றி நின்றனக்குத் தொண்டுபட் டார்களிடஞ்
சார்வின்றி நின்றவெற்குத் தாளிணைகள்—பேர்வின்றி
வாய்ப்பக் கருணையிரா மாநுஜன் றண் ணேரடிகட்
கேய்ப்பதொன் றின்றே யினி. (80)

தெரிவரிய ஞானத்தைச் சேர்ந்தொழுகப் பேணுத்
திருவற்ற வஞ்ஞானஞ் சேரு—மருவினையைப்
போக்குமிரா மாநுஜனைப் போற்றினு னன்னெஞ்சே
யாக்கிடுவ னற்பதவி யாய்ந்து. (81)

சீர்கொண்ட பேரறத்தைச் செய்பவர்தம் புண்ணியத்தாற்
பார்கொள்ளு முன்றன் பதயுகமா—மேர்கொண்ட
வீட்டையிரா மாநுஜன்ருன் மேன்மைபெற வீகுமவன்
பாட்டை யறிமனமே பார்த்து. (82)

கண்டுகொண்டே னுன்றன் கருணைதனை நித்தநித்தந்
தொண்டுகொண்டேன் றெண்டரது துய்யத்தாள்—விண்டுகொள
வன்பவந்தா னெம்மிரா மாநுஜனை யேத்திட்டா
லென்னுலப்பு நெஞ்சே யினி. (83)

ஓதிய வேதத்தி னுச்சியின் மீதிலகு
சோதியை நாதனெனச் சூழாதப்—பேதமையைத்
தீர்த்தவிரா மாநுஜனேச் சேர்ந்தொழுகு தொண்டர்துகள்
போர்த்துநித நன்னெஞ்சே போற்று. (84)

பற்றுத மாநுடரைப் பற்றியதீப் பற்றைவிடா
துற்று ரெனவுழன் ருேடாது—கற்ருர்
பரவுமிரா மாநுஜனைப் பற்றுபவர் பெற்று
லரணமக்கு நெஞ்சே யறி. (85)

பெரியவர்க ணன்மொழியைப் பெட்புடனே சொல்லற்
குரிய மனத்தோ டிணங்கத்—தெரிவரிய
மானந் தருமிரா மாநுஜன்றண் ணற்பதத்தைத்
தானமாய் புன்னெஞ்சே சாற்று. (86)

தென்மொழியை யுண்டுதிறந் தேர்ந்து தடித்ததனு
லன்புமிகச் சீயமிரா மாநுஜன்றன்—னின்மொழிக்கு
வாதியராம் வேங்கைகடம் வாதனேக ணிக்கவந்த
பாதநித நெஞ்சே பணி. (87)

மாட்சித் தருமிரா மாநுஜனே நின்னேயன்றிச்
சாட்சியொடு சாற்றுதற்குத் தாழ்வில்லா—வாட்சிபெறு
மேற்றமென் றேகொண் டிருக்குமென் சிந்தைதனக்
காற்றுதிறந் தந்தளிப்ப தார். (88)

நினேயார் பிறவிதம்மை நீக்குகின்ற நாத
னெனேயாள வந்த விறையைப்—புனேயா
ரிராமா நுஜன்மே லின்புதரு பாக்க
ளராவும் பவமதனே யாய்ந்து. (89)

ஆகமத்தார் கூறு மவப்பொருள்க ளுண்மையுள
தாக மிகப்பயவா தண்டத்துக்—காகநதிச்
சேரு மரங்கனெனச் சீவர்க்குச் செப்புபொருள்
பாருமிரா மாநுஜன்றன் பண்பு. (90)

புண்ணிய நோன்பு பொருந்துமிலேன் போற்றிசெய
நுண்ணருங் கேள்வி நுவன்றுமிலே—னெண்ணரிய
கீர்த்தியிரா மாநுஜநீ கேள்விகண் ணெஞ்சில்புகுந்
தார்த்திகெட வந்தருள்வை யாய்ந்து. (91)

கட்டப் பொருளாங் கயவர்சொலும் புன்மறையின்
பெட்டைக் கெடுத்தவர்தம் பேதமையை—வெட்டிப்
பவத்தை யிரிக்குமிரா மாநுஜன்றன் பாதத்
துவமித்தற் கூடொணு வுய்த்து. (92)

தவந்தருஞ் செல்வந் தகவுந் தருமெம்
பவந்தருந் தீவினைகள் பாற்றித்—திவந்தருந்
தீதிலிரா மாநுஜனைச் சேர்ந்தவர்க டம்பதத்தை
யோதிடுவாய் நெஞ்சே யுணர்ந்து. (93)

உண்ணின் றுயிர்கடமக் குற்றனவே செய்துயர்வு
பண்ணும் பரனும் பரிவுடனே—யெண்ணுநன்
மாடளிப்பன் றண்ணிரா மாநுஜனிம் மேதினியிற்
றேடரிய வேதந் தெரித்து. (94)

வளரும் பிணிகொண்ட வல்வினையான் மிக்கக்
கிளருந் துணிவுங் கெடுத்துத்—தளருநிலை
யாய்ந்திரா மாநுஜன்ரு னன்போ டுவந்துபவஞ்
சாய்ந்திரா தென்கொலோ சாற்று. (95)

போந்ததென் னெஞ்சென்னும் பொன்வண் டுனதடியிற்
காந்தெளி தேனுண் டகங்களிக்க—வீந்தருள
வேண்டுமிரா மாநுஜனே வேறென்று காட்டிமயக்
காண்டிடினுஞ் செல்லா தறி. (96)

மயக்கு மிருவினையாம் வல்லிதனைப் பூண்டு
துயக்கும் பிறவித் துயரி—லுயக்கொண்டு
நல்கவிரா மாநுஜவிந் நானிலத்தி னின்னையுன்ன
லல்லா திழுக்கெனவே நாட்டு. (97)

உன்றன் குணங்களையே யுன்னியென் னுவிருந்
தென்றுமிரா மாநுஜவென் றேத்தநித—நன்றுதர
கையுந் தொழுங்கண் கருதிடுமே காணுதற்கு
வைய மதனின் மதித்து. (98)

இருக்குமிடம் வைகுந்தம் வேங்கடமெண் சோலைப்
பொருப்பிடமா மாயனுக்குப் போற்றி—யிருக்குமிட
மாயனிரா மாநுஜநின் மாமனத் தின்றவன்றுன்
றுயகமா யென்னகத்திற் சார்வு. (99)

அங்கயல் சூழு மணியரங்க நாதனெடு
பங்கயமாம் பாவைப் பழிச்சுதுந்—துங்கமதாய்த்
தங்கிய பத்தித் தலைமிசையே கீர்த்திமிகப்
பொங்குமிரா மாநுஜன்றண் பூ. (100)

பூதலமுந் தான்வாழிப் பூமகளுந் தான்வாழி
வேதமுதன் மற்றெவையும் வீறுதற்கு—நாதனருட்
பெற்றவிரா மாநுஜனும் பெட்பொடு சொன்மாலைக்
கற்றவரும் வாழிநிதங் காண். (101)

வாழியிரா மாநுஜனும் வாழியவன் பாமாலை
வாழியதைக் கற்றவரு மாநிலத்தில்—வாழியவன்
நற்றவரும் வாழியரு ணண்ணினரும் வாழியவன்
சொற்றமொழி வாழித் தொடர்ந்து. (102)

ஸ்ரீமதே லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீஆதிவண் சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் வைபவம்

[இரண்டாம் பதிப்பு]

எம்பெருமான் ஏரார்ந்த எழிலமுதத் திருமகளார்
ஏய்ந்தருளுக் கிலக்காய சேனை நாதன்
நம்பெருமாள் நடையழகி லீடு பட்ட
நம்மாழ்வார் நாதமுனி உய்யக் கொண்டார்
செம்பொருளை யவர்க்குரைத்த மணக்கால் நம்பி
சீருற்ற ஆளவந்தா ரடியே போற்றும்
அம்பெரிய நம்பி அருள்தனையே நாடும்
யதிவரனுர் திருவடிகள் அடைவோம் யாமே.

எம்பெருமா னனுசனென வந்துதித்த பெருமானுர்
எம்மையாளுந் தகவுடைய கோவிந்தப்பெயரிய நம்எம்பார்
நம்பெருமாள் நலன்களையே நவின்றுரைத்த பட்டநாதன்
நலமிக்க வொன்பதினுயிரப்படியை நமக்களித்த நஞ்சீயர்
செம்பொருளை வகுத்துரைத்த செழுங்குணத்து நம்பிள்ளை
செங்கமலப் போதடியை வந்தித்தவடக்குத் திருவீதிப்பிள்ளை
அம்பொருளை யுணர்ந்துரைத்த சீரங்ககேசவ சீனிவாசர்
அருள்புனைந்த சடகோபமாமுனிவன் தாளிணைகள் நந்தலை
[மேலவே.

'ஒரு நாயகமாய் ஓட வுலகுடனுண்டவர், கருநாய் கவர்ந்த காலர்சிதைகிய பானையர், பெருநாடுகாண இம்மையிலே பிச்சை தாம்கொள்வர், திருநாரணன் தாள் காலம் பெறச்சிந்தித் துய்ம்மினோ' என்ற நம்மாழ்வார் பாசுரத்தை நம்மாசார்ய சிகாமணிகளுள் ஒருவர் அளிக்க அதனுலும் பேறுபெற்ற

திருநாராயணபுரம் என்ற திவ்யத் திருப்பதியில் கலி 4480-ம் (கி. பி. 1378) ஆண்டு ஸித்தார்த்தி நாம ஸம்வத்ஸரம், புரட்டாசி மாதம் சுக்லபஞ்சமி குருவாரம் ஜ்யேஷ்டா நக்ஷத்திரம் தனுர் லக்கினத்தில் கிடாம்பி ஸ்ரீ ரங்காசாரியரின் பௌத்திரரான ஸ்ரீ கேசவாசார்யர் என்ற அந்தணச்ரேஷ்டருக்கு நாடு செய்த தவப்பயனுல் ஒரு புத்திரர் அவதரித்தார். இவருக்கு ஸ்ரீநிவாஸா சாரியரென்று திருநாம மிடப்பட்டது. த்ரவிட காதாசாரியரென்று பரம்பரையாக ப்ரஸித்திபெற்ற தமது தந்தையிடமே பஞ்ச சம்ஸ்காரங்களைப்பெற்று ஸ்ரீபகவத் விஷயத்தையும் காலக்ஷேபம் செய்தார். பிதாவின் அநுமதியின்பேரில் ஸ்ரீநடாதூரம்மாள் பௌத்ரரான கடிகாசதம் அம்மாள் என்று கீர்த்தியுடன் விளங்கிய வாத்ஸ்ய வரதாசாரியரிடம் ஸ்ரீபாஷ்யம் முதலிய ஸம்ப்ரதாய கிரந்தங்களைக் காலக்ஷேபம் செய்தார். திருநாராயணபுரத்தில் யதுகிரியிலுள்ள ஒரு பிலத்தில் எழுந்தருளியிருக்கும் யோகாநந்த ந்ருஸிம்ஹன் ஸந்நதியில் யோகம் அப்யஸித்து ஸாதனமும் பெற்ருர்.

'செங்கணுளி இட்டிறைஞ்சும் சிங்கவேள் குன்றமே' என்றும், 'சிலைக்கைவேடர் தெழிப்பருத சிங்கவேள் குன்றமே' என்றும், 'தெய்வ மல்லால் செல்லவொண்ணுச்சிங்கவேள் குன்றமே' என்றும், 'கல்லதர் வேய்ங்கழைபோய் தேய்த்ததீயால் விண் சிவக்கும் சிங்கவேள் குன்றமே' என்றும், 'சில்லு சில்லென் றெல்லருத சிங்கவேள் குன்றமே' என்றும், 'இருந்தமிழ் நூற் புலவன் மங்கையாளன் மன்னுதொல்சீர் வண்டறை தார்க்கலியன்' என்ற திருமங்கையாழ்வாரால் மங்களாசாஸனம் பண்ணப்பட்ட திருப்பதி சிங்கவேள் குன்றம் என்ற ஸ்ரீ அகோபிலம். வேங்கட வெற்பென விளங்கும் வேதவெற்பு என்றதால் திருமலையும் அகோபிலமும் ஒன்றற்கொன்று தொடர்புடையன என்பது வேதசிரத்தேசிகனுர் திருவுள்ளம். அரங்கநகரப்பன் நம்பெரு மாள். அவரால் நஞ்சடகோபனென ஆதரத்தால் அழைக்கப் பட்டவர் நம்மாழ்வார். வையமெல்லாம் மறைவிளங்க வாள் வேலேந்தும் மங்கையர்கோன் சிங்கவேள் குன்றத்தானை 'நம் முடை நம்பெருமான்' என்பர். 'ஜ்வாலா ஹோபிலமாலோலக் ரோடா காரஞ்சபார்கவ: யோகாநந்தச் சத்ரவட: பாவநா நவ மூர்த்தய:' என்றபடி ஒன்பதுரு நரசிங்கனுகந்துறையும் திருப் பதியே இவ்வகோபிலம். இச்சிங்கவேள் குன்றுடையான் ஒரு

யதிரூபியாய் எழுந்தருளி ஸ்ரீ ஸ்ரீநிவாசாசாரியருக்கு நாலைந்தாம் திருநக்ஷத்திரமான பகுதான்யஸ்ஸ் புரட்டாசிமீ சுக்ல பஞ்சமி உதயகாலத்தில் பிரேஷ மந்த்ரத்தை உபதேசித்தருளி ஸந்யா ஸாச்ரமத்தையும் யதாக்கிரமமாய்ப்பண்ணிவைத்து ஸ்ரீ சடகோப ஜீயரென்று தாஸ்யநாமமும்பிரஸாதித்தருளி அந்தர்த்தானமானார். ஸ்ரீமதகோபிலநரஸிம்மமூர்த்திகளுள் ஒருவரான ஸ்ரீ லக்ஷ்மி ந்ருஸிம்ஹன் ஸ்வாமியின் விசேஷ ஆராத்ய தெய்வமானன். இவர் மாத்ராங்குலாஷ்டக பரிமிதராய், வாமாங்கத்தில் பெரிய பிராட்டியாராலே அலங்கிருதராய், ததாலிங்கன வியாபிருத வாம பாஹுகமலராய், சங்கசக்ராதி லாஞ்சித அப்ரஹஸ்த கிஸலய ராய், பாதுகாலங்கிருத சரணயுகளராய், திருவடிகளை வருடா நின்ற பெரியதிருவடியை யுடையவராய்த் திகழ்ந்து விளங்குவர். நாதன் என்றால் நரசிங்கன். கம்பநாடரும் 'நாதன் பாதுகம்' என்பர். ஸ்வாமிக்கு ஸ்ரீ ஆதிவண் சடகோப யதீந்த்ர மஹா தேசிகன் என்பது முழுத்திருநாமம்.

எத்திசையும் ஏத்தநின்ற எழிற்குரு காபதியும்
பத்தியுடைப் பாகவதர் போற்றும் பூதூர்முனியும்
சத்தியத்தின் மூர்த்தியென நின்ற மறையோனும்
இத்தலத்தி லோருருவில் மாமுனியாய் வந்தார்.

வண்டுவரா பதிவணங்கும் வண் சடகோபன்
வண்டமிழ்மா றன்பணியும் வண் சடகோபன்
ஒண்டொடியாள் ஒளிபரப்பும் வண் சடகோபன்
ஓங்குமலை வாழவந்த வண் சடகோபன்
பண்டைவினை மாற்றியருள் வண் சடகோபன்
பண்டறத்தை நாட்டவந்த வண் சடகோபன்
விண்டுபர னென்றுபகர் வண் சடகோபன்
திண்கழலே சரணகக் கொள்வோம் யாமே.

இம்மாமுனிவர் பண்புடைய வம்மாள்தன் பரிவுக்கிலக்காகி பாஷியத்தைப் பலகாலும் பகுத்துரைத்த பண்பாளர்; பொன்பெய ரோன் மார்பிடந்தான் புகழுரைப்பதேதமக்குப் போது போக்காகப் பெற்ற பெற்றியர்; இரகசிய முப்பத்திரண்டும் ரசித்துரைக்கும்

நாவீறர்; அகலாமே மாறனுரை யருத்தமுடனனைவருக்கும் தகவாலே யுரைத்தருளும் தக்கோர்; பெரும்பூதூர்ப் புரந்தன்னில் வந்து முந்துபிணி தீர்த்த தேசிகனே பின்னும் வந்தனைத்தும் பணிய நின்றான் எனச்சான்றோரால்கொண்டாடப்பட்டவர்; ஸ்ரீரங்கநாச்சியார் ஸந்நிதியின் முன்பேயுள்ள ஸ்ரீதேசிகன் ஸந்நிதி, தசாவதாரன் ஸந்நிதி, பேரருளாளன் ஸந்நிதியிலுள்ள நூற்றுக்கால் மண்டபம், திருமலையில் ஸோபாநம் முதலியவற்றை ஏற்படுத்திய பெருந்தகையாளர்; ஸ்ரீராமாநுஜ சித்தாந்தத்தை இமயம் முதல் கன்னியீருக ப்ரவசனம் செய்த பேரறிஞர்; பல்லாயிரக்கணக்கான சிஷ்யர்களால் ஆசிரயிக்கப்பட்டு ஸ்ரீ பாஷ்யகாரரால் ஏற்படுத்தப்பட்ட எழுபத்து நான்கு ஸிம்மாஸனாதிபதிகளுக்கும் அத்யக்ஷராய் விளங்கியவர்; ஸ்ரீஸந்நிதியில் ஸ்ரீபாஷ்யம், ஸ்ரீபகவத்விஷயம், ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரம் முதலிய கிரந்த காலக்ஷேபம் என்றும் நடைபெறுமாறு செய்த நன்னெஞ்சர். இம்மஹாதேசிகன் கலி 4560-ம் ஆண்டு பஹுதான்யவரு சித்திரைமீ கிருஷ்ண ஏகாதசியில் தம் அவதார க்ஷேத்திரமான திருநாராயண புரத்திலேயே இந்த லீலா விபூதியை விட்டு நித்திய விபூதியை அலங்கரித்தார்.

ஸ்ரீ அஹோபில மடத்தின் பெருமை அளவற்றது. அன்று தொட்டின்று காறும் இவ்வாஸ்தானத்துக்கு எழுந்தருளியுள்ள அழகிய சிங்கர்களின் சீர்மையும் அடியேன் போல்வாரால் செப்பத் தரமன்று. தற்போது ஆஸ்தானத்தை அலங்கரித்துக்கொண்டிருக்கும் நாற்பத்தொன்றாம் பட்டத்து ஸ்ரீ அழகியசிங்கரின் குணாதிசயங்கள் மிகவும் கொண்டாடத்தக்கன.

திருநரசிங்க சடகோப யதீந்த்ரமஹா தேசிகன்றன்
ஞானமனுட் டானங்கள் நனி விளங்க
திருவுற்ற சிட்டரெல்லாம் அங்குச்சென் றவரடியில்
சென்னி மிகத் தாழ்த்தி நின்றே
மருவற்ற மாகலைகள் மாண்புமிக மாசில்லா
மனத்துடனே யோதியவ ரருளும் பெற்று
திருவுற்ற திருமார்பன் றிருவருளைச் சிந்தித்துய்யுந்
திருவை யுந்தா மடையா நிற்பர்.

இவ்வழகிய சிங்கர் பல்லாண்டு பல்லாண்டாய் அரோகதிட

காத்ரராய் எழுந்தருளியிருந்து நம்மவரைப் பரமகிருபையுடன் பரிபாலித்து வரும்படி அரிமுகனை அநுதினமும் அகங்கரைந்து வழுத்துவோமாக. பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.

"நல்லை நெஞ்சே ! நாம் தொழுதும் நம்முடை நம்பெருமான்
அல்லிமாதர் புல்கநின்ற ஆயிரந்தோளனிடம்
நெல்லி மல்கிக் கல்லுடைப்பப் புல்லிலையார்த்து அதர்வாய்ச்
சில்லுசில்லென் றொல்லருத சிங்கவேள் குன்றமே."

ஈசுவர ஆண்டு
புரட்டாசிக் கேட்டை.
10–10–'37

பந்தல்குடிமாடபூசி
ரெ. திருமலை ஐயங்கார்,
காரியதரிசி.
42, ஏ. வெங்கடரங்கம் பிள்ளை தெரு,
திருவல்லிக்கேணி.

இலக்கம்.	வெளியீட்டின் பெயர்.	வள்ளலார் பெயர்.
31.	மார்கழி மாலை.	ஸ்ரீமான் பூண்டி அச்சுத கோபாலாசாரியார் அவர்கள்.
32.	மதுரகவி மாலை.	ஸ்ரீமான் கே. எஸ். ஸ்ரீநிவாஸாசாரியார் அவர்கள்.
33.	திருவருட்சதக மாலை.	ஸ்ரீமான் என். கிருஷ்ணய்யங்கார் அவர்கள்.
34.	சீரொன்று தூப்புற்றனியன் மாலை.	அருள் வரதரடியார்.
35.	மும்மறைத் தெளிவுப்பெருருண் மூதுரை மாலை.	ஸ்ரீமான் அமிஞ்சிக்கரை ஆதிநாராயண ஸ்வாமி ரெட்டியார் அவர்கள்.
36.	அருளாளர் மாலை.	ஸ்ரீமான் திண்டுக்கல் ராமஸ்வாமி அய்யங்கார் அவர்கள்.
37.	பூங்கோதை மாலை.	ஸ்ரீமான் பி. எஸ். கிருஷ்ணய்யங்கார் அவர்கள். ஸ்ரீமான் பி. எஸ். நாராயணய்யங்கார் அவர்கள்.
38.	பூமகள் மாலை.	ஸ்ரீமான் பி. கோபாலாசார்யா அவர்கள்.
39.	இடைப்பிள்ளை மாலை.	ஸ்ரீமான் பி. ஏ. சந்தானமய்யங்கார் அவர்கள்.
40.	செந்தாமரையாள் மாலை.	ராவ்பஹதூர் என். கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் அவர்கள்.
41.	பெரியபிராட்டியார் மாலை.	ஸ்ரீமான் ஆர். கோபாலஸ்வாமி அய்யங்கார் அவர்கள்.
42.	தேசிகரந்தாதிமாலை.	ஸ்ரீமான் திருநின்றவூர் பாலவேடு பரவஸ்து நரஸிம்மாசாரியார் அவர்கள்.
43.	இராமாவதாரமாலை.	ஸ்ரீமான் டி. ஸி. நாராயணஸ்வாமி அய்யர் அவர்கள்
44.	திருவெவ்வளூர் ஸ்ரீ வீரராகவமாலை.	ஸ்ரீமான் லக்ஷ்மிநரஸிம்ஹ பிள்ளை அவர்கள்.
45.	ஆனைபரிதேரின் மேலழகர்மாலை.	ஸ்ரீமான் சுந்தரவரதய்யங்கார் அவர்கள். ஸ்ரீமான் நரஸிம்ஹராகவய்யங்கார் அவர்கள்.
46.	வாழித்திருநாமப்பாமாலை.	ஸ்ரீமான் என். கிருஷ்ணமாசாரியார் அவர்கள்.
47.	அத்திகிரி வரதன் அந்தாதி மாலை.	அருள் வரதரடியார்.
48.	ஸ்ரீ வேங்கட க்ருஷ்ணன் மாமணி மாலை.	மூவந்தணர்.
49.	ஸ்ரீ பெரும்பூதூர் வந்த வள்ளல் மாலை.	அடியார்க்கு நல்லார்.

பெறும் இடம்: ஆநந்த பிருந்தாவநம்,
ஸ்ரீ மௌனசுவாமிகள் மடத்துத் தெரு, அம்பத்தூர்.

5, 7, 8, 10, 15, 16 இலக்கம் உள்ளவை இப்போது கைவசமில்லை.